Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 207 07-11-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூ. 5/

உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்
ஈஸ்ரன் கிராபிக்ஸ்
230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821

# மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் நேற்று மாலை விடுதலை

## கட்சியினர் தொடர்ந்து கைது

(கொழும்பு)

இரகசியப் பொலிஸாரினால் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரன் நேற்று மாலை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாக கடந்தமாதம் 29ம் திகதி தலவாக்கலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி கண்டனக் கூட்டம் ஆகிய வற்றைத் தொடர்ந்து கடந்த மாதம் 30ம் திகதி அதிகாலை இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு



விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தார்.

இவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக மலையக அரசியல் கட்சி பிரதிநிதிகள் அவரை விடுதலை செய்யுமாறு கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விடுதலை செய்யப்பட்ட பின்னர் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கருத்து தெரிவிக்கையில் கடந்த மாதம் 29ம் திகதி நடந்த தலவாக்கல்ல சம்பவங்களைத் தொடர்ந்து என்னை உடனடியாக இரகசியப் பொலிசார் கைது செய்தார்கள்.

அதன்பின்னர் என்னிடம் தடுப்புக்காவல் உத்தரவு கையளிக்கப்படும்போது அவசரகாலச் சட்டத்தில் என்னென்ன பிரமாணங்கள் இருக்கிறதோ அத்தனையையும் உள்ளடக்கிய குற்றப்பத்திரம் எனக்கு கையளிக்கப்பட்டது என தெரிவித்தார்.

## குடிமக்கள் மீதான தாக்குதலை
## மௌலானா எம். பி. உத்தரவு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடிப் பிரதேசத்தில் படையினரின் எறிகணைத் தாக்குதலால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது குறித்து செங்கலடிப் பிரதேச மக்கள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவிடம் முறையிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொது மக்கள் மீதான பிரதேசங்கள் மீது படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அலிஸாஹிர் மௌலானா எம்.பி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடித மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த இரு வாரங்களில் இப்பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினரால் ஏவப்பட்ட எறிகணைகளினால் மூன்று பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

## மண்ணெண்ணை விலையைக் கட்டுப்படுத்த புலிகள் நடவடிக்கை

(வவுனியா நிருபர்)

வன்னியில் மண்ணெண்ணையின் விலையை குறைப்பதற்கு விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னியில் படையினர் எரிபொருள் தடை விதித்ததைத் தொடர்ந்து மண்ணெண்ணை விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவற்றை கட்டுப் படுத்தும் வகையில் நேற்றிலிருந்து ஒருலீற்றர் மண்ணெண்ணை 120 ரூபாவாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக புலிகளின் காவற்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

## 20 தமிழ்க் கைதிகளை மட்டு சிறைக்கு மாற்றக் கோரிக்கை



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தற்போது வெலிக்கடை மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை வழக்குகள் முடியும் வரை மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா சட்டமா அதிபர்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பிரபல பாடசாலைக்கு சென்ற 500 மாணவர்கள் அதிபரால் திருப்பியனுப்பப்பட்டனர்.

(அரியம்)

மட்டு நகரின் பழம்பெரும் தேசிய பாடசாலை ஒன்றின் மாணவர்கள் சுமார் ஐநூறுபேர் நேற்று பாடசாலை அதிபரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கடந்த வெள்ளி.சனி ஆகிய இருநாட்களும் பாடசாலைக்கு சமூகமளிக்காத மாணவர்களே இவ்வாறு அதிபரால் திருப்பியனுப்பப்பட்டனர். அத்துடன் மேற்படி மாணவர்களின் பெற்றோர்களை

### பெற்றோர்கள் விசனம்

பாடசாலைக்கு அழைத்து வருமாறும் அதிபர் உத்தரவிட்டாராம்.

நிமலராஜன் படுகொலை. பண்டாரவளை புனர்வாழ்வு நிலை

(8ம் பக்கம் பார்க்க)

## ஜாயா கோல்ட்' நான்கு தடவை சேவையில் ஈடுபடும்.

(திருமலை நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவை குழுவினர் 'ஜாயா கோல்ட்' நோயாளார் கப்பல் சேவை ஒன்று இம்மாதம் 4 தடவைகள் நடைபெறும் என அவர்களின் செய்தி குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. திருகோணமலையில் இருந்து 07, 14, 21, 28ம் திகதிகளிலும் பருத்தித்துறையில் இருந்து 09, 16, 23, 30ம் திகதிகளிலும் இச்சேவை நடைபெறும். இதுவரை இக்கப்பல் 10 சேவைகளை நோயாளர் நலன்கருதி நடத்தி வந்துள்ளது.

## சிறுவரை துஷ்பிரயோகம் புரிந்த வெளிநாட்டவர் கைது!

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரில் சிறுவர் துஷ்பிரயோக நிலையமொன்றை நடாத்தி வந்த வெளிநாட்டு நபர் ஒருவரும் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்திய பதினான்கு வயது சிறுவன் ஒருவரும் நேற்று நீர் கொழும்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சிறுவனுக்கு ஐந்து நாட்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்து துஷ்பிரயோகத்தில் அமர்த்தி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பிரிட்டன் ஆதரவு

(நமது நிருபர்)

அரசும் புலிகளும் நோர்வேயின் சமாதான முயற்சியினை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி மோதல் தவிர்ப்பில் ஈடுபட்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என பிரிட்டன் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரிட்டன் தூதரகம் மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும். நோர்வே அரசு மேற்கொண்டு வரும் முயற்சிக்கு பிரிட்டன் பூரண ஆதரவை வழங்கும் எனவும் கூறியுள்ளது.

அமெரிக்கா. பிரான்ஸ் ஆகிய நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இது குறித்து அமெரிக்க தூதரக பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கும் நோர்வே பிரதிநிதி எரிக்சோல் ஹெய்மிடம் விடுதலைப்புலிகளின் தலைவர் கூறிய விடயத்தை கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த போது அறிந்து கொள்ள முடிந்தது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை நோர்வேயின் சமாதான முயற்சிகளை பாராட்டியுள்ள பிரான்ஸ் இப்பேச்சுவார்த்தை விபரங்கள் பற்றி அறிய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையை பெறவிருப்பதாக தெரிவித்துள்ளது.

## ஐ.தே.கட்சி ஆதரவு வழங்கும் – ரணில் –

நோர்வே அரசு எடுத்து வரும் சமாதான முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவு வழங்கும் என் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று காலை பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அவர்கள் எதிர்கட்சித் தலைவருடன் நோர்வேயின் சமாதான முயற்சிகள். தொடர்பாக நடத்திய பேச்சுவார்த்தையின் போதே எதிர்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றக் கட்டிடத்துக்கு கடும் பொலிஸ் பாதுகாப்பு !

(நமது நிருபர்)

பதினோராவது பாராளுமன்றத்தின் கொள்ளை விளக்கவுரை 9ம் திகதி இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளார்.

இதனை முன்னிட்டு பாராளுமன்றத்தின் சுற்றுப் புறங்களில்

(8ம் பக்கம் பார்க்க)



சி.ல.மு.காங்கிரஸ் மூத்த துணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதூர்கனி (யூ.எல்.எம்.ஹுனீபா)க்கு 2000-10-28 மருதமுனையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.ஜெமீல், மூத்த துணைத்தலைவர் மருதூர் கனி எம்.பி. ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

படமும் தகவலும் :- மருதமுனை ஹுரீஷா)

# மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை மட்/தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெறும். இவ்விழாவில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் க.கதிர்காமநாதன் தலைமையில் காலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிரதம அதிதியாக அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமியும், சிறப்பு அதிதிகளாக மேலதிக அரச அதிபர் வே.சண்முகம், திருமலை வடக்கு கிழக்கு மாகாணசபை பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் செ.எதிர்மன்னசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழ் வாழ்த்து இடம்பெறும். அதனையடுத்ததாக சச்சிதானந்தன் கஜேந்திரன் பேசுவார். "மட்டக்களப்பு கலை சாரப் பாரம்பரியமும் ஆவணப்படுத்தலும்" என்ற தலைப்பில் கலாநிதி சி.மௌ.தங்கராசா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

காலை 10 மணிக்கு 'புத்தாயிரம் மலர்ந்தென்ன' என்ற தலைப்பில் அ.செல்வேந்திரன் தலைமையில் கவியரங்கம் நிகழும்.

கவியரங்கில் கவிஞர்கள் வாகரைவாணன், செல்வி.சி.சிவகுமாரி, சி.மௌனகுரு, தேசத்தி... ஆகியோர் கவிதை பாடுவார்கள். இதைத் தொடர்ந்து ஜனாப் ... காத்தான்குடியைச் சேர்ந்த ... தொடர்ந்து நவீன உடைகளின் தமிழ் கலாசாரத்தை வளப்படுத்துகின்றன.

அல்லது சீரழிக்கின்றன எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும். பட்டிமன்றத்திற்கு திருமதி கமலா சக்கரவர்த்தி தலைமை தாங்குவார். இத்துடன் காலை நிகழ்வுகள் முடிவு பெற மாலை நிகழ்ச்சியாக மலர்வெளியீடு இடம்பெறும். கலாசார உத்தியோகத்தர் த.மலர்ச்செல்வன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். இதனையடுத்து கலைஞர் கௌரவம் நிகழும். வண.ஜோன் ஜோசப் மேரி அடிகளார் நாடகத்துறைக்காகவும், ஆ.தங்கத்துரை (தங்கன்) ஆக்க இலக்கியத் துறைக்காகவும், செல்வி. தங்கேஸ்வரி கதிராமன் ஆய்வு - தொல்லியலுக்காகவும் எஸ்.எஸ்.யேசுதாஸ் (மலர்வேந்தன்) சஞ்சிகைத் துறைக்காகவும், வைத்திய கலாநிதி ஜோசப் ஞானப்பிரகாசம் வைத்தியத் துறைக்காகவும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து கலாபூசணம் விருது பெற்ற மூத்த கலைஞர் கந்தசாமி இராமமூர்த்தி (நாதஸ்வரம்) பாராட்டிக் கௌரவிக்கப்படுவார். இதன்பின் சிறப்பு விருந்தினர்கள் உரை இடம்பெறும். இதையடுத்து பரிசளிப்பு வைபவம் நடைபெறும். பரிசளிப்பு நிகழ்வு முடிவடைந்ததும் பிரதம விருந்தினர் உரையை அடுத்து நுண்கலைக் கழகம் ... இளைஞர்களின் ... நடனம் ... வித்தியாலய மாணவிகளின் ... நாடகமும் மேடையேறும்.

... (... உத்தியோகத்தர்) நன்றியுரை நிகழ்த்தியதும் முத்தமிழ் விழா நிறைவு பெறும்.

# ஆளுநர் விருது பெறும் கவிஞர் செ. குணரத்தினம்

## அவுஸ்திரேலியா கவிதைப் போட்டியில் 1ம் பரிசு பெற்றவர்



இம்மாதம் 17,18,19ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் இலக்கிய விழாவில் மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த கவிஞர் செ.குணரத்தினத்திற்கு ஆளுநர் விருது வழங்கப்படவிருக்கிறது. இலக்கியத் துறையில் இவர் ஆற்றிய சேவைக்காகவே ஆளுநர் விருதும், கௌரவமும் வழங்கப்படவிருக்கும் இவ்வேளையில் அவுஸ்திரேலியா விக்டோரிய ஈழத்தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் இவருக்கு முதல்பரிசு கிடைத்திருக்கிறது.

கவிதை, சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்களில் நிறையவே பங்காற்றி, பல பரிசுகளையும் பெற்றுள்ள செ.குணரத்தினம் கிழக்கிலங்கையிலிருந்து வெளிவரும் 'தினக்கதிர்' பத்திரிகையின் உதவியாசிரியராவார்.

இலக்கியமணி, தமிழ்மணி போன்ற பட்டங்களை ஏற்கனவே பெற்றுள்ள 'செ.கு' மட்டக்களப்பிலிருந்து தொடர்ச்சியாக எழுதி வரும் ஒரு படைப்பாளி என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் சீர்திருத்த யோசனையை புலிகளுக்கு அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொலஹெய்ம் மீண்டும் வன்னி செல்லும் போது அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான ஆவண அறிக்கையை ஏற்பாடுகள் செய்துள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.என்.ஜயரட்ண தெரிவித்தார். இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் ஆவணம் புலிகளால் பரிசீலிக்கப்பட்ட பின்னர் புலிகளின் கருத்துகள் பற்றி அறியமுடியும் எனவும் தெரிவித்தார்.

# மாகாண நகர, உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்த கோரிக்கை

(நற்பிட்டிமுனை நிருபர்)

தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இம்மாகாண வாழ் மூவின மக்களின் நன்மை கருதியும், அரச நிருவாகத்தின் ஜனநாயகத் தன்மையினைக் கருத்திற் கொண்டும் நீண்ட காலமாக நடாத்தப்படாமல் இருக்கும் மாகாண சபை, நகர சபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடாத்தப்பட வேண்டும் என்று கல்முனை வடக்கு பிரஜைகள் குழுத் தலைவர் ஜனாப் ஏ.எம்.நாபி இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு அவசர செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் மேற்படி தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி முன்னரும் பல்வேறுபட்ட பொதுநல அமைப்புக்கள் கோரிக்கைகளை விடுத்திருந்தும் அக்கோரிக்கைகள் அனைத்தும் இம்மாகாணங்களின் பாதுகாப்பு நிலைமைகளை காரணம் காட்டி கவனத்தில் எடுக்கப்படாமலிருந்த அதேவேளை இம்மாகாணங்களில் முக்கிய தேர்தல்களான ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பன அசாதாரண சூழ்நிலையில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளதையும் தாங்கள் அறிவீர்கள் எனவும், தற்போது வடக்கு - கிழக்கு மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமையினாலும், அரசாங்க அதிகாரிகளிடம் அவ்வதிகாரங்கள் சென்றடைந்துள்ளதினாலும் பல்வேறு ஊழல்களும், முறைகேடுகளும் நடைபெறுவதுடன், பொது மக்களும் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதுடன், இனப்பிரச்சினை, பயங்கரவாதம் என்பவற்றால் பலத்த இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ள இம்மாகாணங்களில் மேற்படி தேர்தல்களை காலதாமதமின்றி நடாத்துவதன் மூலம் மீண்டும் அமைதி நிலையினையும், பூரண சிவில் நிருவாகத்தையும் ஏற்படுத்த பெரு வாய்ப்பாக அமையுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குருளைச் சாரணருக்கான சின்னம் அணிவிப்பு

(எஸ்.எஸ்.குமார்)

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி குருளைச் சாரணர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு கடந்த வாரம் (31.10.2000) நடைபெற்றது. இதில் 07 பேருக்கு சின்னங்கள் வழங்கப்பட்டது. 2வது திருமலை சாரணர் குழு குருளை சாரணர் தலைவர் செல்வி. மீரா இராமசந்திரன் தலைமையில் குருளைச் சாரணர் தலைவர்களான செல்வி திருமகள் நாயகம் சிற்றம்பலம், திருமதி சாந்தினி ரமணீசுரன் ஆகியோர் சின்னங்களை அணிவித்து வைத்தனர்.

# பேரவைக்கு புதிய நிர்வாகிகள்

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடியில் அமைந்துள்ள அகில இலங்கை இஸ்லாமிய மெய்யுணர்வாளர் பேரவையின் புதிய நிருவாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது. அதன் விபரம் வருமாறு.

போஷகர் :- மௌலவி அல்ஹாஜ் ஏ.அப்துர் றஊப் (மிஸ்பாஹி)

தலைவர் :- டாக்டர் எஸ்.எச்.எம்.சிறாஜ்

உபதலைவர் :- பொறியியலாளர் எம்.ஏ.சி.எம்.பாயிஸ்

செயலாளர் :- டாக்டர் எஸ்.எம்.றபீக்

உபசெயலாளர் :- ஐ.எல்.எம்.முஹ்சின்

பொருளாளர் :- அல்ஹாஜ் எம்.சி.எம்.ஹுஸைன்

உபபொருளாளர் :- மௌலவி எம்.எம்.எம்.கப்பான்

கணக்குப் பரிசோதகர் :- எம்.ரி.எம்.ஹசன்

மற்றும் 8 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# "புனர்வாழ்வு முகாம்படுகொலைகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்"

## தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு

(மருதமுனை ஹுரீஷா)

அண்மையில் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டமை எமக்கு மிகுந்த மனவேதனையைத் தருகிறது. அமைதியைக் கொண்டு இடம்பெற்ற இம் உயிர்களை ... ஒன்றாக மாறியிருப்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத இந்த செயல் இன முரண்பாட்டை மேலும் வளர்க்கவே வழிவகுக்கும்.

இவ்வாறு தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் எஸ்.எம். சிராஜ் செயலாளர் ஜே.பெளமி ஆகியோர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்திருந்தனர். 1983ல் நிகழ்ந்த வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகளின் அதிர்வுகளே இன்னும் அடங்கவில்லை. அவ்வாறான நிலையில் இச்சம்பவம் நிகழ்ந்திருப்பது துரதிஷ்டமானதாகும்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் முடிவே இல்லையா? சிறுபான்மை தமிழ் மக்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் இக்காட்டு மிராண்டித்தனமான செயலுக்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும்.

உடனடியாக யுத்தத்தை நிறுத்தி புலிகளோடு பேசுவதன் மூலம் மட்டுமே இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் இதற்கு வசதி செய்வதற்கான சூழ்நிலைகளை நாம் ஏற்படுத்த வேண்டியது மிக மிக அவசியமானதாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# கொழும்பு பாதுகாப்புக்கு விசேட பொலிஸ் குழுக்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மாவீரர் தின வாரத்தை முன்னிட்டு கொழும்பு நகரில் தாக்குதல்கள் இடம்பெறலாம் என பலனாம் ... கள் கருதுகின்றனர்.

இதேவேளை கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## ராஜ்குமார் கடத்தப்பட்டு 100 நாட்கள் முடிந்து விட்டது.
# பிரச்சினை தீர்ந்தபாடில்லை

சென்னை

கன்னட நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்டு நூறு நாட்கள் முடிந்து விட்டன. கடந்த ஜூலை மாதம் 30-ந்தேதி இரவு தாளவாடி அருகே தொட்ட காஜனூரில் இருந்து ராஜ்குமார் மற்றும் 3 பேர் கடத்தி செல்லப்பட்டனர். இந்த சம்பவம் நடந்து இன்றுடன் 100 நாள் ஆகிறது.

கடத்தல் விவகாரத்தில் இதுவரை நடந்த முக்கிய சம்பவங்கள் வருமாறு:

* நக்கீரன் கோபால் அரசு தூதராக 4 முறை காட்டுக்கு சென்று வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.
* நாகப்பா தப்பி வந்தார்.
* கோபாலுடன் நெடுமாறன் குழு பேச்சுவார்த்தை நடத்தியது.
* ராஜ்குமார் மருமகன் கோவிந்தராஜு விடுதலை.
* தற்போது ராஜ்குமாரும், டைரக்டர் நாகேசும் பணய கைதிகளாக உள்ளனர்.
* தடா கைதிகள் விடுதலையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அப்துல் கரீம் தொடர்ந்த வழக்கில் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது.



* ராஜ்குமார் காட்டு வாழ்க்கையில் இன்று 100-வது நாள்.

### நிராகரிப்பு

கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க 121 தடா கைதி மற்றும் 5 தமிழ் தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வீரப்பன் நிபந்தனை விதித்து இருக்கிறார்.

இதனால் மைசூர் கோர்ட்டு வழக்கில் கைதிகளாக இருந்து வரும் 51 பேர் மீதான தடா வழக்கை வாபஸ் பெற கர்நாடக அரசு முடிவு செய்தது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டு இதற்கு தடைவிதித்துவிட்டது. இதில் 51 பேரையும் விடுதலை செய்ய தேசிய மனித உரிமை கமிஷனிடம் நெடுமாறன் குழு வேண்டு கோள் விடுத்தது. தேசிய மனித உரிமை கமிஷன் சமீபத்தில் அதன் தலைவர் ஜே.எஸ்.வர்மா தலைமையில் கூடி ஆலோசித்தது. அப்போது 51 தடா கைதி தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் நடந்து வரும் வழக்கில் மனித உரிமை கமிஷன் தலையிடுவதில்லை என்று முடிவு எடுக்கப் பட்டது. நெடுமாறன் கோரிக்கையை இதன் மூலம் மனித உரிமை கமிஷன் நிராகரித்து விட்டது.

# அமெரிக்காவில் இன்று அதிபர் தேர்தல், புஷ் – அல்கோர் இடையே கடும் போட்டி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் அந்நாடு முழுவதும் கடைசிகட்ட பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி பில் கிளிண்டனின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முடிவடைகிறது. கிளிண்டன் சார்ந்துள்ள ஜனநாயகக் கட்சியின் சார்பில் தற்போது உதவி ஜனாதிபதி பதவி வகிக்கும் அல் கோர் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து அமெரிக்க குடியரசுக் கட்சியின் சார்பில் ஜார்ஜ் ஜூனியர் புஷ் போட்டியிடுகிறார். இவர் முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்சின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மக்களிடம் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறாரோ, அவர் வாங்கிய வாக்குகளின் சதவீதத்தைப் பொறுத்து மாநிலங்களின் எலக்டோரல் ஓட்டுக்களும் அதிகம் கிடைக்கும். உதாரணமாக கலிபோர்னியா மாநிலத்தின் எலக்டோரல் ஓட்டுக்களின் எண்ணிக்கை 54. இந்த 54 ஓட்டுக்களும் அதிக சதவீத வாக்குகள் பெறும் வாக்காளருக்கு முதலில் அளிக்கப்பட்டுவிடும். இது போன்று 50 மாநிலங்களின் மொத்த எலக்டோரல் ஓட்டுக்களின் எண்ணிக்கை 538. இதில் மக்களின் வாக்குகள் சதவீதத்தின் அடிப்படையில் 270 எலக்டோரல் ஓட்டுக்களைப் பெற்றால் தான் ஒருவர் ஜனாதிபதியாக முடியும். அமெரிக்க அரசியல் சட்டம் அப்படி.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தேர்தலுக்கு முன்னதாக நடத்தப்படும் கருத்துக் கணிப்புகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த வெள்ளியன்று கடைசியாக நடைபெற்ற கருத்துக்கணிப்பில் ஜூனியர் புஷ்சுக்கு 46 சதவீத வாக்குகளும் அல்கோருக்கு 42 சதவீத வாக்குகளும் கிடைத்திருந்தன. இதன்படி பார்த்தால் ஜூனியர் புஷ் 212 எலக்டோரல் ஓட்டுக்களும் அல் கோர் 211 எலக்டோரல் ஓட்டுக்களும் பெற்று இழுபறி நிலையில் உள்ளனர். மீதமுள்ள எலக்டோரல் வாக்குகளைப் பொறுத்தே முடிவுகள் அமையும்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் கடைசி கட்ட பிரசாரம் நடைபெற்று வருகிறது. இரு வேட்பாளர்களும் ஒருவரை ஒருவர் காட்டமாக தாக்கி பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். 24 வருடங்களுக்கு முன்னால் ஜூனியர் புஷ் குடித்துவிட்டு கார் ஓட்டி அபராதம் கட்டியுள்ளார் என்று அல்கோரேவின் ஆதரவாளர்கள் அமெரிக்க பத்திரிகைகளில் செய்தி வரும்படி செய்தனர். மேலும் புஷ் பணக்காரர்களுக்குத்தான் உதவி செய்வார். அவருடைய திட்டங்கள் அனைத்தும் வசதி படைத்த மக்களுக்காகத் தான் எனவும், முன்னேற வேண்டும் என்று போராடும் மக்களைக் கண்டுகொள்ளமாட்டார் எனவும் மேற்கு விர்ஜினியா மாநிலத்தில் நேற்று அல்கோர் பிரசாரம் செய்தார்.

இப்போது நாட்டை ஒருங்கிணைக்கக் கூடிய தலைவர் தான் தேவை. மக்களை பிரிப்பவர்கள் தேவையில்லை. ஒற்றுமையின் மூலம் இந்த நாட்டை எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு கொண்டு செல்லும் தலைவருக்கு வாக்களியுங்கள். ஏழை, பணக்காரன் என்று மக்களை இரண்டு வர்க்கமாக பிரிப்பவரை அடையாளம் கண்டு கொள்ளுங்கள் என்று பென்சில் வேனியா மற்றும் பிட்ஸ்பர்க் மாநிலங்களில் பிரசாரம் செய்த புஷ் பதில் தாக்குதல் கொடுத்தார்.

டி.வி., போஸ்டர், பேரணி மீட்டிங் என்று நாடுமுழுவதும் களைகட்டும் தேர்தலில் கிளிண்டன் மற்றும் கண்டுகொள்ளப்படாமல் உள்ளார். கட்சி இவரை கடைசி நேரத்தில் அல்கோருக்கு 'ஆதரவாக பிரசாரம் மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டதால் தனது மனைவி ஹிலாரி செனட் உறுப்பினராகப் பதவி வகிக்கும் நியூயார்க் மாநிலத்தில் மட்டும் பிரசாரம் செய்து வருகிறார். கிளிண்டன் மீதுள்ள செக்ஸ் புகார்கள், தனது வெற்றி வாய்ப்பை பாதித்துவிடக்கூடும் என அல்கோர் அஞ்சுவதால், அல்கோர் ஆதரவாளர்கள் கிளிண்டனை ஒரு எல்லை வரையே பிரசாரம் செய்ய அனுமதித்துள்ளனர். எது எப்படியோ, உலகின் சக்தி வாய்ந்த தலைவர் இந்த இருவரில் யார்? என்பது இன்னும் 2 அல்லது 3 நாட்களில் தெரிந்து விடும்.

# சிங்கப்பூருக்கு 'அபராத நகரம்' என்றும் அழைக்கின்றனராம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு சிங்கப்பூர் அரசாங்கம் 230 மில்லியன் டாலர்களுக்கு மேல் வருடந்தம் செலவிடுகிறது.

எனினும் எதிர்காலத்தில் இதனைக் கட்டுப்படுத்த தீர்மானித்துள்ளனர். சுத்தமான நகரம் என்ற அந்தஸ்த்தை தொடர்ந்து பேணுவதற்கு இதற்கு மேல் செலவிட முடிந்த போதிலும் மக்களின் பங்களிப்பு இதற்கு அவசியப் படுவதாக சூழல் சுற்றுப்புற அமைச்சர் பதிலமைச்சர் கூறியுள்ளார்.

40 லட்சம் மக்கள் வாழும் சிங்கப்பூரில் குப்பை போடுதல், எச்சில் துப்புதல், மலம் கழித்தல், என்பன குற்றச் செயல்களாக கணிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும். இக் குற்றச் செயலைத் தொடர்ந்து செய்பவர்களுக்கு பொது இடங்களை சுத்தம் செய்யுமாறு உத்தரவிடப்படுவதுண்டு. இப்படியான செயல்களுக்கு குற்றம் என தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படுவதால் 'அபராதங்களின் நகரம்' என சிங்கப்பூர் அழைக்கப்படுகிறது.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி



### கேரளாவில் பிடிபட்ட அபூர்வ இன கறுப்பு புலியை படத்தில் காணலாம்

# 89 பேரை பலி வாங்கிய விபத்து விமானிகள் மன்னிப்பு கேட்க வேண்டும் தாய்வான் பயணிகள் போர் கொடி

தாய்வான் விமான விபத்து குறித்து சிங்கப்பூர் ஏர்லைன்சின் விமானிகள் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தாய்வான் நாட்டு பயணிகள் வலியுறுத்தியிருக்கின்றனர். நஷ்டஈடு அதிகமாக தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றனர்.

கடந்த செவ்வாயன்று சிங்கப்பூரிலிருந்து அமெரிக்க நகரமான லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 179 பயணிகளுடன் புறப்பட்ட சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானம் தாய்வான் தலைநகர் தைபே அருகே கீழே நொறுங்கி தீ பிடித்துக்கொண்டது. விழுந்த வேகத்தில் விமானம் 3 துண்டுகளாக சிதறியது.

இந்த விமான விபத்தில் 13 இந்தியர்கள் உள்பட 89 பேர் கொல்லப்பட்டனர். விபத்திற்கான காரணம் பேய் காற்று, புயல் மழை என கூறப்பட்டாலும்... விமானிகள் தவறான மூடப்பட்ட ஓடுபாதையில் விமானத்தை ஓட்டியது தான் என தெரியவந்திருக்கின்றது.

இந்த நிலையில்... விமான விபத்தில் உயிரிழந்த நபர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.2கோடி நஷ்டஈடு வழங்கப்படும் என சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம் நேற்று முன் தினம் அறிவித்திருந்தது.

இந்த பின்னனியில்... சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்திற்கு எதிராக உயிரிழந்த தாய்வான் நாட்டு பயணிகளின் உறவினர்கள் போர்கொடி தூக்கியிருக்கின்றனர்.

தவறாக விமானத்தை ஓட்டி 81 பயணிகளை கொன்றதற்காக அந்த விமானத்தினை ஓட்டி வந்த 3 விமானிகளும் பகிரங்கமாக மனனிப்பு கேட்க வேண்டும் என்று லின்-சின்-டாஸ் என்பவர் நேற்று முறையிட்டார். இந்த விபத்தில் இவருடைய மகளும் பேத்தியும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடதக்கது.

விமான விபத்து எப்படி தான் நிகழ்ந்தது என்பது குறித்து விமான நிறுவனமும் விளக்கமளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

தவிர தாய்வான் நாடு பயணிகள் 5 கோடி நஷ்டஈடு போதாது என்றும் இன்னும் அதிகம் தர வேண்டும் என போர்குரல் எழுப்பியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

# மண் சரிவினால் 52 பேர் பலி, 7 கிராமங்கள் புதைந்தன

(ஜகார்த்தா)

இந்தோநேசியாவின் மத்திய ஜாவா மாகாணத்தில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவுகளில் குறைந்த பட்சம் 52 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்று உள்ளூர் செய்திகள் கூறுகின்றன.

மூன்று நாள் பெய்த மழையை அடுத்து நேற்று அதிகாலை இந்த மண்சரிவுகள் இடம் பெற்றன. ஏழு கிராமங்கள் சேற்றில் புதையுண்ட வேளையில் பலர் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரத்தில் இதே போன்ற மண்சரிவுகள் இரு இடங்களில் ஏற்பட்டன.

# பெற்றோல் தாங்கி வெடித்து 200 பேர் தளத்திலேயே பலி

(லாகோஸ்)

நைஜிரியாவில் பெற்றோல் தாங்கி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பாதையில் சென்ற வேறு வாகனங்களுடன் மோதி வெடித்தினால் 200 பேர் அத்தளத்திலேயே பலியாகியுள்ளனர்.

பெற்றோல் தாங்கி வெடித்து பலியான 200 பேர்களில் புதுமணத் தம்பதிகளும் அடங்குவதாகச் கூறப்படுகின்றது. இவ்விபத்தில் 10 வாகனங்கள் சேதமடைந்துள்ளன. பெற்றோல் பாதையில் கசிந்ததையடுத்தே தாங்கி வெடித்ததாக பொலிஸ் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.

# பிறந்த திகதி தரும்யோகம்.

## ஜோதிடம் - யூலை-05

யூலை மாதம் 6,15,24.ம் திகதியில் பிறந்தவர்களின் பலன்கள்

எண் 6 அதன் அதிபதி சுக்கிரன்

காதல் மன்னன் எனப் புகழ் பெறுவீர்கள். அதே நேரத்தில் இரக்க மனம் அன்பு, பாசம் அனைவருக்கும் உதவிடும் பண்பு இவை அனைத்தும் பெற்றவர்கள். இதனால் எந்த காரியமானாலும் எளிதில் சாதிக்கும்திறமையும் பெறுவீர்கள். வருங்காலம் அறியும் திறமை பெற்றவர்கள்.ஜோதிடக் கலையில் வல்லவர்கள். விதி வலிது. வினைக்கேற்பவே செயல்களும் பயனும் நடைபெறும் என்னும் நம்பிக்கை உடையவர்கள். தாய்ப்பாசம் மிக்கவர்கள். தயை இருசிவரை காப்பாற்றுபவர்கள். உறவினருக்கு உதவும் மனம் உடையவர்கள். வேண்டியதை வேண்டிய நேரம் கொடுத்து உதவியும் செய்வீர்கள். திருமண வாழ்க்கை திருப்திகரமாக அமையாது.

திருமணத்தை நல்ல முறையில் சிந்தித்து சீர்தூக்கி ஆராய்ந்துசெய்தால்: ஆண்களானால்பெண்களாலும், பெண்களானால் ஆண்களாலும் யோகம் பெறும் அதிர்ஷ்டம் உடையவர்கள். திருமணத்தால் யோகம் பெறுவீர்கள்.பூர்வீகச் சொத்துக்களால் நன்மை அடைவீர்கள்.

எத் தொழிலும் முயற்சிக்கேற்ப வெற்றியைக் கொடுக்கும். யோசித்து முடிவுக்கு வராமல் எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டார்கள். தோல்வியால் சோர்வடைய மாட்டார்கள். வசீகரமான தோற்றமும் விடாமுயற்சியும் தன் காரியத்திலேயே கண்ணாயிருக்கும் தன்மையும் உடைய இவர்கள் செல்வமும் செல்வாக்கும் பொருந்தினவர்களாக வாழ்வதில் வியப்பொன்றுமில்லை. துளிகூட சந்தோஷமில்லாமல் இவர்கள் அதிர்ஷடசாலிகள் என்று குறிப்பிடலாம்.

அதிக உழைப்பால் பிந்தியகாலத்தில் நரம்புத்தளர்ச்சி ஏற்படும். அத்தோடு குடல் வால் நோய் மூலநோய் இவற்றால் தொல்லைகள் ஏற்படும். உணவு வகைகளில்கவனம் செலுத்தினால் பல நோய்கள் வராமல் தடுக்கலாம் உங்களுக்கு சைவ உணவே ஏற்றதாகும்.

2-6-7-11-15-16-20-24-25-29ம் தேதிகள் எந்த ஆண்டு மாதமானாலும் நன்மை தரும் நாட்களாகும்.

உங்கள் வாழ்க்கையில் 5-15-24-33-42-51-60-69-78 வயதுகளில் பல நன்மையான நிகழ்ச்சிகள் நடைபெறலாம். 6-15-24-3-9-12-18-21-27-30ம் தேதிகளில் பிறந்தவர்களின் நட்பு உயர்வான நட்பாகும். மேற்குறித்த திகதிகளில் பிறந்தவர்கள் வாழ்க்கைத்துணையாக அமையுமானால் உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு போல இல் வாழ்க்கையும் அமையும்.

வர்ணம்: ஆழ்ந்த பச்சை, ஆழ்ந்த நீலம் மற்ற நீலம், பச்சை, சிவப்பு கலந்தவர்ணங்கள் அதிர்ஷ்ட மானவை.

இரத்தினம்: மகரதம். emerald சிலிக்கா, அலுமினியா, சோடா, மக்னீஸ் போன்ற ரசாயனக் கலவை ஒப்படர்த்தி 2.73 கடினத்தன்மை 7.5 இக்கல்லினை உடலில் அணிவதால் வலிப்பு, சிறுநீரகக்கல், தீராத வயிற்றுவலி, ரத்தவிருத்தி இன்மை, வாதம், பித்தம், நரம்பு சம்மந்தமான வியாதிகளை நீக்கி சந்தோஷத்தையும், அதிஷ்டத்தையும் கொடுக்கும்.

வே.தவராசா

## நம்பிக்கையின் அடிப்படையிலேயே........(2ம் பக்க தொடர்ச்சி)

முடியாது. உலக ரீதியாக நாங்கள் இப்படியான பிரச்சினைகளை பார்த்தால் இதே விதமான நிலமைகளை அவதானிக்கலாம்.

**கேள்வி:-** பிரபாகரனுடனான அண்மைக்கால பேச்சு நிலமைகளை மாற்றியுள்ளதா?

**பதில்:-** நிச்சயமாக கடந்த 5 வருடங்களாக அவர் எந்தவிதமான வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் சந்திக்கவில்லை. ஆகவே நாங்கள் இது ஓர்பெரியநிகழ்வாக கருத்திலெடுத்துள்ளோம்.

**கேள்வி:-** உங்களது விஜயத்தை நிருபிப்பதுசம்பந்தமான ஒலிப்பதிவு நாடாக்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் முதலியவற்றை வைத்துள்ளீர்களா?

**பதில்:-** ஆம் என்னிடம் அதற்கான ஆதாரங்கள் உள்ளன.

**கேள்வி:-** நீங்கள் அதை ஊடகங்களுக்கு வெளியிட கொடுப்பீர்களா?

**பதில்:-** இல்லை.

ஜனாதிபதியைச் சந்தித்த பின்பு மீண்டும் வன்னி செல்ல முடியும் என நம்புகிறோம்.

### சமாதான முயற்சியில் உத்தரவாதம் தர முடியாது

**கேள்வி:-** பிரபாகரன் தனக்கு போரில் இருந்து ஏதேனும் இளைப்பாறுதல்கள் தேவைப்படின் சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தயாராக இருப்பார் என்று ஒருபார்வை உள்ளது. இச்சம்பவம் மீண்டும் ஒருமுறை நடக்காது என்பதற்கு ஏதேனும் உத்தரவாதங்கள் உண்டா?

**பதில்:-** நான் நினைக்கிறேன் சமாதான முயற்சிகளின் போது எந்தவிதமான உத்தரவாதங்களையும் நாங்கள் தரமுடியாது. எங்களது முக்கியமான இந்த விடயங்களை சாத்தியமாக்குவதற்கான கடமைகள் நம்பிக்கையின் அடிப்படையிலேயே கட்டப்பட்டுள்ளன. பிரபாகரன் இது விடயமாக தீவிரமாக உள்ளார் என நாங்கள் கருதுகின்றோம். அதே வேளை நாங்கள் இதற்கு எந்தவிதமான உத்தரவாதங்களும் தர முடியாது.

**கேள்வி:-** நீங்கள் குறிப்பிட்டீர்கள் 5 வருடங்களுக்குப் பின் இது தான் முதல் தடவை திரு. பிரபாகரன் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்திப்பது என்று. நீங்கள் அவரை எவ்வாறு மதிப்பீடு செய்தீர்கள்?

**பதில்:-** அவர் மிகவும் தேகாரோக்கியத்துடன் காணப்பட்டார். அவர் மிகவும் ஆர்வத்துடன் பேச்சுகளில் கலந்து கொண்டார் அத்தோடு தன்து உறுதியான அபிபிராயங்களை முன்வைத்து பேசினார்.

(தமிழில் - ரூபன்)

# கந்த சஷ்டி விழாவில் புராணிகர் கௌரவிப்பு

(நமது நிருபர்)



மட்டக்களப்பு புளியந்தீவு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ செல்வர் கெ.கு.பரமானந்தம் ஐயர் விரதாதிகளுக்கு சஸ்கல்ப்பபூர்வமாக விரத அனுஸ்டான மூலம் ஆரம்பித்து வைத்தார். ஆறு தினங்களும் கந்தப்புராணப்படலம் சிவநெறிச் செல்வர் புராணிகர் வே.ச.சுப்பையாவும், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியும் புராணிகர் எஸ்.முருகப்பர் அவர்களும் பாடினார்கள். இறுதிநாள் திருக்கல்யாண விழா விமர்சையாக நடைபெற்றது. இவற்றில் சிறப்பு நிகழ்ச்சியாக புராணிகர் கௌரவிப்பு இடம்பெற்றது. இப்பெருவிழாவில் பிரதம அதிதி முத்தமிழ் அரசு சிவயோகச் செல்வர் சாம்பசிவம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியது குறிப்பிடத்தக்கது.

கடந்த பல ஆண்டுகளாக இவ்வாலயத்தில் கந்தப்புராணம் பாடிவரும் முருகப்பர் அவர்கட்கு ''புராணப்படல் சித்தர்'' என்ற பட்டமும், வே.ச.சுப்பையா அவர்கட்கு ''புராணிகஜோதி'' என்ற பட்டமும் சூட்டி ஆலய பரிபாலன சபை சார்பாக பொன்னாடையும் போர்த்தி கௌரவித்தனர்.

மேற்படி ஆலய பரிபாலன சபைத்தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற விழாவில் உபதலைவர் யோகவேல், ஆலய பரிபாலன சபை செயலாளர் மகாதேவா, பொருளாளர் ஆனந்தப் போடி ஆகியோர் பாராட்டி உரையாற்றினார்கள்.

# செய்திச்சுருக்கம்

### பிரிட்டன் ஆதரவு

பேச்சு வார்த்தை மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட" முடியும் "என பிரிட்டிஸ் அரசு நம்புவதாக தெரிவித்துள்ளது. பிரிட்டிஷ் தூதரகம் தற்போது நோர்வே அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள் நல்ல வரவேற்பை அளித்துள்ளன.

### இளைஞர்கள் கைது

நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு தோட்டங்களில் இளைஞர்களும் தொழிலாளர்களும்பொலிசாரினால் விசாரனைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு நாளைக்கிடையில் மாத்திரம் 80 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காககொண்டு செல்லப்பட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

### கைதியின் மரணம்

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 3ம் திகதி கணபதி சிவரத்தினம் என்ற கைதி யாழ் சிறைச்சாலையில் மரணமானார். இவரது மரணம் தொடர்பான வழக்கு விசார்ணை தற்போது யாழ்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

### இனவாத சாயம் பூசுகின்றனர்.

பேரினவாதக் கட்சிகள் முஸ்லிம்களின் உரிமைகள், சலுகைகள், என்பவற்றை தாமே அனுபவிக்க முயற்சிக்கின்றன இதனாலேயே நாம் எமது சமூகத்தவர்களுக்காக முன் வைத்த கோரிக்கைகளுக்கு இனவாதசாயம் பூசுகின்றன. இவ்விடயத்தில் ஊடகங்களும் துணைபோவது வருந்தத்தக்கதாகும் இவ்வாறு காங்கிரஸின் இணைத்தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

### தண்டிக்க வேண்டும்

பண்டாரவளை, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலைகளுக்கு காரணமான குற்றவாளிகளை இனங்கண்டு உரிய தண்டனை வழங்குமாறு கோரி சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி ஐயப்ப தாஸன்சாம்பசிவ சிவாச்சாரியார் கணபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவித்துள்ளார்.

### உளவுத்துறை இணைப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் போராளிகளின் விபரங்களை அழித்துக் கொள்வதற்கு என சர்வதேச ரீதியாகப் பிரபல்யம் பெற்ற உலவுத்துறை அதிகாரிகள் ஆறு நாடுகளிலிருந்து 20க்கும் மேற்பட்டஉலவுத்துறை அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் உளவுத்துறை அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

### காடையருக்கு ஆதரவு

வந்தாளைப் பகுதியில் கடந்த வாரம் இரு தமிழ்ப் பெண்கள்கடத்திச் செல்லப்பட்டதே காடையர் கோஷ்டியொன்றினால் மிக மோசமாகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ள பாதாள உலகக் கோஷ்டி ஒன்றின் தலைவரையும். அவரது சகாக்கள் மூவரையும் விடுதலை செய்யுமாறு அரசியால்வாதிகள் பொலிஸாருக்கு நெருக்குதல்களைக் கொடுத்து வருகின்றனர்.

# கசப்பான அனுபவங்க்ளை மறந்து செயல்பட வேண்டும் -ஜோசப்.எம்.பி-

(வேதாந்தி)

கடந்தபொதுத் தேர்தலின் போது ஏற்பட்ட கசப்பான சம்பவங்களையும் மறந்து கட்சி பேதமின்றி சகல மக்களுக்கும் சேவையாற்றுவதேதனது நோக்கம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

கட்சி ஆதரவாளர்களால் ஒழுங்குப்படுத்தப்பட்ட வரவேற்பு வைபவம் ஞாயிற்றுக்கிழமை லேக்வியுன் விருந்தினர் விடுதியில் கே.தியாகராஜாஜே.பி தலைமையில்நடைபெற்றது. இவ்வைபவத்தில் கட்சி உறுப்பினர்களான எஸ்.ஆலாலசுந்தர்ம், ஜோர்ஜ் பிள்ளை,வே.தவராஜா, மா.இராஜதுரை,எஸ்.தர்மராஜன் போன்றோர்களும் உரையாற்றினர்

இவ்வைபவத்தில் ஜோசப்எம்.பி.தொடர்ந்து உரையாற்றுகையில் ஒரு மனிதனுக்கு ஆண்டவன்பல்வேறு சிறப்புக்களை வழங்குகின்றான். இச் சிறப்புக்கள் மூலம் மக்களுக்கு சேவை செய்பவனே உண்மையான மனிதன். நட்பின் மூலம் ஒரு மனிதன்உயரலாம். மனிதர்களுக்கிடையிலானஇந்நட்பு உள்ளத்தில் இருந்து எழவேண்டும். அப்போது தான் அந்த நட்பு உண்மையான நட்பாக காணப்படும். மன்னிக்கும் மனப்பான்மையை சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த பொதுத்தேர்தலில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை எமது கட்சி ஆதரவாளர்கள் மறந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றார்

# பெரியநீலாவணை மருத்துவமனை மீண்டும் இயங்க நடவடிக்கை

(மருதமுனை ஹரீஷா)

பெரிய நீலாவணையில் கடந்த பல வருடங்களாக பாழடைந்துகிடந்த வைத்திய சாலையைபாராளுமன்ற உறுப்பினர் மருதூர்க்கனி கடந்த 2000-10-29ம் திகதி நேரில் சென்று பார்வையிட்டார்.

இவ்வைத்தியசாலை கடந்த காலங்களில் இடம் பெற்ற இனக் கலவரம், பயங்கரவாதப் பிரச்சினை என்பவற்றால் பாதிக்கப்பட்டு சேதமடைந்து கவனிப்பாரற்று பாழடைந்து இருந்தது.

பெரிய நீலாவணை "குளோபல் இஸ்லாமிக் சேவிஸ்" நிறுவத்தினர் இவ்வைத்தியசாலை அண்மையில் துப்புரவு செய்து ஒவ்வொரு வாரமும் சனி, வியாழன் ஆகியதினங்களில் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். டாக்டராக ஐ.எல்.உவைசுல்பாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வைத்திய சாலையின் குறைகளையும், தேவைகளையும் கேட்டறிந்த பாராளுமன்றஉறுப்பினர் மருதூர்க்கனிஇவ்வைத் தியசாலையை தரமுயர்த்து வதற்கும், வாரத்தில் முழு நாட்களும் இயங்குவதற்கான நடவடிக்கைகளைமேற் கொள்வதாக உறுதியளித்தார்.

# அம்பாறையில் காப்பாற்றப்பட்ட தமிழர் பிரதிநிதித்துவம்!

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவத்தை தக்க வைக்கும் பொருட்டு அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் எடுத்த முடிவானது தீர்க்கதரிசனமான ஒரு புரட்சிகர செயற்பாடேயாகும். இலங்கையின் வரலாற்றில் இனத் தின் பிரதிநிதித்துவத்தை பேணுதல் என்ற ஒரே குறிக்கோளுடன் சுயேட்சை அணியில் மாறுபட்ட கோட்பாடுகளையுடைய கட்சிகளை பொதுச்சின்னத்தில் இணைத்து தனித்தனியாக பிரசார சத்திகளை மேற்கொண்டு இனப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுத்தமை ஒரு சாதனையாகும்.

இச்சாதனையானது, பல அணிகளின் போட்டியில் தமிழ் உறுப்புரிமை இழக்க வாய்ப்பு அதிகமுள்ள திருமலை, கொழும்பு போன்ற மாவட்டங்களிலும் பின்பற்றப்பட்டிருக்குமாயின் பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் நிச்சயம் அதிகரித்திருக்கும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த முறை தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதி இல்லாமையினாலும், இதற்கு முந்திய தடவை வெற்றி பெற்ற உறுப்பினரின் அரசியல் செயற்பாடுகளினாலும்,' தமிழ் மக்கள் துயரங்களை சந்திக்க நேர்ந்தது. அம்பாறை மாவட்டத் தமிழர்கள் " தமிழர்கள் " என்ற தேசிய சிந்தனையுடனும் அதற்கு ஆனாலும், இம்மாவட்டத்தில் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். காரணம் யாதெனில் சிங்கள மக்களால் மட்டுமல்ல இம்மாவட்டத்தில் முஸ்லீம்களிலும், சிறுபான்மையானவும் பிரதிநிதித்துவம் இன்றியும் கடந்த காலங்களில் பல பிரச்சினைகளுக்கு தீர்வு இன்றியும் புதிய பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ நேர்ந்தது. இவ்வாறான இக்கட்டு நேர்ந்த போதெல்லாம் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் அவற்றைத் தடுக்க பெரிதும் முயன்றது. இருப்பினும் அரசியல் வலு இன்மையால் அனைத்தும் வெற்றிபெறவில்லை. இன்னிலையில் தான் பிரதிநிதித்துவத்தை எப்படி காப்பாற்றுவது, அரசியல் வலுவை எப்படி சமூகத்திற்கு தேடுவது என்ற நிலை ஏற்பட்டு " சுயேட்சை அரசியல் " என்ற முடிவு உருவானது. இம் முடிவை முன்னெடுப்பதில் மகாசங்கத்தின் தலைவர், செயலாளர், மாவட்ட இணைப்பாளரும் தலைமை வேட்பாளராக போட்டியிட்டவருமான தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் மற்றும் குறிப்பிட்டு கூறக்கூடிய சில மகா சங்க உறுப்பினர்கள் சோர்ந்து போகாது ஆற்றிய பணிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மகத்தானவை. இதற்கு ஒத்துழைத்து இணைந்து போட்டியிட்ட ரெலோ, ஈ.பி.டி.பி என்பவற்றின் செயற்பாடுகளும் மக்களால் மறக்க முடியாதவை.

இன்னிலையில் பிரதான தமிழ்கட்சியான கூட்டணி இம் முடிவை மறுதலித்தும் எதிர்த்தும் போட்டியிட முனைந்தும் துரதிஸ்டமாகும். சட்ட ரீதியாக எழுந்த பிரச்சினையில் கூட்டணிப் பட்டியல் நிராகரிக்கப்பட்டமையானது. நிச்சயம் இரு தமிழ் உறுப்பினர்களை அல்லது ஒரு உறுப்பினராவது தமிழராக இருப்பார் என்பதை உறுதிப்படுத்தியது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இறுதி நேரத்தில் கூட்டணித் தலைமை தெளிவான அறிவுறுத்தல் விடுக்கவில்லை எனினும் புத்திசாலித்தனமான முடிவையே எடுத்திருந்தது. அதாவது பேரினவாதக் கட்சிகளான பொதுஜன முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாக்களிக்கக் கூடாது என்பதாகும். ஆனால் இதனை சுய நலமாகவும் கீழ்த்தரமமாகவும் செயற்பட்ட இம் மாவட்ட கூட்டணிப் பிரமுகர்களின் திட்டமிட்ட செய்கை புனிதமான கட்சியின் கோட்பாட்டை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

இதே வேளை இம்மாவட்ட யு.என்.பி. அபேட்சகர் ஒருவருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் யாழ் பிரதிமேயர் ரவிராஜின் குறிப்புரை பத்திரிகை தேர்தல் விளம்பரங்களில் இடம் பெற்றிருந்தமை மற்றுமொரு கொள்கையற்ற செயற்பாடாகும்.

சுயேட்சை அணியில் கூட்டணி பங்கு பற்றி இருந்திருக்குமாயின் 2 தமிழ் பிரதிநிதிகள் வென்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும். அதுவும் கூட்டணி உறுப்பினர்களாக இருந்திருக்க வாய்ப்புக்கள் அதிகமாகவே தென்பட்டுள்ளன. ஏனெனில் சுயேட்சை பெற்ற வாக்குகளிலும் அதிகப்படி

## முரளிதரன்

யான (சுமார் 10000) வாக்குகள் கூட்டணியினரின் தூண்டுதலினால் யு.என்.பி. க்கு அளிக்கப்பட்டது. இதற்கு பிரதிபலனாக யு.என்.பி. தேசியப்பட்டியலில் இப்பகுதி தமிழருக்கு இடம் கோரப்பட்டது. ஆனால் அதுவும் நிறைவேற்றப்படவில்லை. இது ஒருபுறமிருக்க கூட்டணியினருக்கு வெற்றி பெறும் ஒரு தமிழரை விட இதன் முக்கியத்துவம் என்ன? கூட்டணி போட்டியிடத் தீர்மானித்த போது கூட இங்குள்ள பிரமுகர்களால் தோல்வி நேருமிடத்து இப்பகுதியில் வாழும் ஒருவருக்கு தேசியப்பட்டியல் வாய்ப்பு கோரப்பட்டது. இதனைக் கூட்டணித் தலைவர் கூட உத்தரவாதப்படுத்தவில்லை. இந்நிலையில் பேரினவாத கட்சியினை யு.என்.பி. யினிடம் இவ் வாய்ப்பைக் கோரி நிற்பது ஏளனத்திற்குரியது.

ரெலோ, ஈ.பி.டி.பி கோபாலக்கிருஷ்ணன் போன்றவர்களை வெற்றிபெறக் கூடாது என்றால் ஏன் வேறொரு பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு ஆதரவளித்து வெற்றிபெற செய்து கூட்டணி தனது வலிமையை பறைசாற்றியிருக்க கூடாது. இவ்வாறு ஒருவர் வெற்றி பெற்றிருப்பின் அவர் கூட்டணியின் கொள்கைக்கு கட்டுப்பட்டு அல்லது அதற்கு விசுவாசமாக செயற்பட்டிருப்பார் அல்லவா?

இன்னுமொரு வகையில் நோக்குமிடத்து, வெறுமனே அறிக்கை விடுவதும் இனத்திற்கு குரல் கொடுப்பதையும், மட்டும் மக்கள் எதிர்பார்க்கவில்லை என்பது வடக்கு கிழக்கு தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. கடந்த 25 வருடங்களாக மக்கள் போராட்டத்திற்கு உறுதுணையானவர்களை தெரிவு செய்ய முனைந்துள்ளனர். தொடர்ந்தும் அந்நிலைதான் என்றாலும் முடிவு தெரியாத இனப் பிரச்சினைத் தீர்வு ஒரு புறமிருக்க மலைபோல் அதிகரித்துள்ள அன்றாடப் பிரச்சினைகளான வேலை வாய்ப்பு, சுகாதாரம், வீதி, போக்குவரத்து மற்றும் பல்வேறு பிரச்சினைகளை கையாளும் வலிமை கூட்டணியிடம் இல்லை என்ற உறுதியான கருத்து ஏற்பட்டுள்ளமை ஒரு துரதிஸ்டமானதாகும். இதனை உணர்த்தவே, மக்கள் யு.என்.பீ, பொதுஜன முன்னணி முன்னாள் ஆயுதப் போராளிகளுக்கும் ஆதரவு நல்கியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் தனிமனிதனாக வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் போராட்டம் நடாத்திய போது ஏன் கூட்டணியினரால் முடியாது என்ற நிலை? தேசியப் பிரச்சினைக்காக மட்டுமல்ல, அன்றாடப் பிரச்சினைகளுக்காகவும் பாராளுமன்றத்தை அவ்வப்போது பகிஸ்கரித்து, எதிரணியினருடனும் இணைந்தும் தனித்தும் உண்ணாவிரதமிருந்தும் ஏன் அகிம்சைவாதிகளால் அன்றாடத் தேவைகளையாவது வென்றெடுக்க உழைக்க முடியாது போனது. கட்சியிலும் உறுதியான கட்டுக் கோப்பில்லை. இனத்தின் நலன்கருதி ஏன் ஜே.வி.பி கட்சி போன்று நீதியான வழிமுறையில் கட்டுக்கோப்பாக கட்சியை மறுசீரமைக்க முடியாதுள்ளது.

எதிர்காலத்தில் இவ் அமைப்புக்கு புதிய சந்ததிகள் தேவை. இல்லையேல் நல்லகோட்பாடுகள், அகிம்சை செயற்பாடுகள் அனைத்தும் அழிந்து போய் விடுமல்லவா?

விசேடமாக அம்பாறை மாவட்ட தமிழர்களின் எல்லைகள் நாளுக்கு நாள் இழக்கப்படுகின்றன. சகல தமிழர் பிரதேச எல்லைகளும் மாறுபடுகின்றன. தனிப்பிரதேச செயலகமாக அவைகள் இல்லை. பிரதேச சபைகளாக அவைகள் இல்லை. வணக்கஸ்தலங்கள் அழிவிலிருந்து மீட்கப்படவில்லை. சுகாதார வசதிகளில்லை. கல்வி வலயங்களிலும் பிரச்சினைகள். இவற்றிற்கு தீர்வு காணவே இப்பகுதி புத்திஜீவிகள் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அவசியம் என உணர்ந்தனர். இந் நிலையில் பிரதான தமிழ்கட்சி வேட்பாளர்களாக போட்டியிடவிருந்தவர்களே யு.என்.பி காரர்களாக செயற்பட்டு மக்களின் வாக்குகளை வீணடித்தமை கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும். இனிவரும் ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் அம்பாறை மாவட்ட தமிழர் மாகசங்கதின் கடந்த முடிவு ஓர் தெளிவை தர வேண்டும். இவ்வழி முறை திருமலையிலும் கொழும்பிலும் பின் பற்றப்படவேண்டும் என்பதே புத்திஜீவிகளின் கருத்தாகும்.

சிலர் இவ்வாறு முன்னாள் ஆயுதக்குழுக்கலுடன் இணைந்து போட்டியிடுவதால் பழிவாங்கப்படலாம் என்ற அச்ச உணர்வையும் வெளிப்படுத்தின. இது நியாயமற்றது. வேட்பாளர் ஒருவர் தன்னை அர்ப்பணித்து செயற்படத்துணியாத விடத்து மக்கள் துயரங்களை எப்படி தீர்ப்பது. உலகறியச் செய்வது. ஒரு அமைப்பு இன்னொரு வெற்றி பெறும் உறுப்பினருக்கு ஆப்பு வைக்கலாம். அதன் மூலம் ஆசனத்தை பெறலாம் என்ற வன்முறை எண்ணம் நியாயமற்றது. துரோகமானது. ஆனால் அதற்காக ஒவ்வொரு கட்சியும் தனித்து செயற்பட்டு, இன உறுப்புரிமையைப்பறி கொடுப்பதா? எல்லாவற்றிற்கும் துணிவு இல்லாதவர்கள் தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக ஆக முடியாது. இன்றைய சூழலில் தங்களைப் பாதுகாக்க வழி தேட முடியாதவர்கள் எப்படி மக்களைப் பாதுகாப்பது. வேட்பாளர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ சட்டரீதியான பாதுகாப்பை உறுதி செய்ய அருகதை உள்ளவர்கள். தியாக சிந்தை இன்றியும் கோழை உணர்வுடன் மக்கள் பிரதிநிதிகள் செயற்படலாகாது.

அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாததினால் அருந்தொண்டாற்றிய மகாசங்கத்தின் முயற்சிகள் முழுமையாக பலனளிக்கவில்லை. இன்று மகாசங்கத்தின் முயற்சியால் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் உருவாக்கப்பட்டது. இதுவே ஒரு இமாலய வெற்றி. இத்துடன் இதன் பணி முடிந்து விட்டதா என்ன? இனிமேல் தான் இவ் அமைப்பின் இலக்குகள் ஒவ்வொன்றாக வெல்லப்பட வேணடும். இதற்கு இவ் அமைப்பு கடந்த முறையை விடவும் சிறப்பாக செயலாற்றி வெற்றி பெற்ற உறுப்பினருக்கு தூண்டுதலாகவும், செய்து முடிக்க வேண்டிய மக்களின் நற்பணிக்காக ஒத்துழைப்பு நல்கியாக வேண்டும்.

தெரிவாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினரும் தென் கிழக்கு அலகையும் கரையோர மாவட்ட கோசத்தையும் வலுவுடன் எதிர்க்கக் கூடியவராகவுள்ளமை இப்பகுதி மக்களுக்கும் மகாசங்கத்திற்கும் ஒரு வெற்றியாகும். இவர் மீது மட்டும் பணிகள் அனைத்தையும், விட்டு விட்டு ஒதுங்குவது மக்கள் பணி செய்ய வேண்டிய அமைப்பு மக்களை ஏமாற்றுவதாகிவிடும். இவ் அமைப்புக்கும் இவ் உறுப்பினரின் வெற்றியில் கணிசமான, காத்திரமான பங்கு உண்டு. இம்மாவட்ட தமிழர் மகாசங்கத்தின் செயற்பாடுகளை வெற்றி பெறசெய்ய இம் மாவட்டத்திலுள்ள சகல அரசியற் பிரமுகர்களும், கட்சியினரும் பொது மக்களும், புத்திஜீவிகளும் இவ் அமைப்பில் இணைந்து தங்களின் பங்களிப்பை நல்கவேண்டும்.

அமைப்பு தன்னை வளப்படுத்திக் கொள்ளவும் பாராளுமன்ற உறுப்பினருக்கூடாக முயல வேண்டும். குறிப்பாக இவ் அமைப்புக்கான கட்டிடம் மற்றும் பொருளாதார வலிமை, என்பன பாராளுமன்ற பிரதிநிதி மூலமாக பெற்றுக் கொள்ளப்படலாம். அத்துடன் இவ் அமைப்பு சமூக நடவடிக்கையிலும் இனத்திற்கும் மக்களுக்கும் தொண்டாற்றும் வகையிலும் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் போல் தொழிற்பட வழிவகைகள் காணப்படல் வேண்டும். எதிர்கால சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார விடயங்களில் காத்திரமான பங்குபணி செய்யும் அமைப்பாக இது தொழிற்பட்டு ஏனைய மாவட்டத்தவருக்கும் ஓர் முன்னுதாரமாக விளங்க வேண்டும். கடந்த அரசியல் செயற்பாட்டில் வேண்டத்தகாத கசப்புணர்வுகள் இவ் அமைப்பின் பெயரால் ஏற்பட்டிருக்கலாம். அவை மறக்கப்பட வேண்டியவையாகும். இணைந்து போட்டியிட்ட அமைப்புக்கள் ஒன்றையொன்று சேறு பூசும்படி நடந்திருக்கலாம். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் ஒரே கட்சியில் போட்டியிடுபவர்களுக்கு இடையில் கூட விருப்பு வாக்குக்கான மோதல் இருப்பது ஒரு குறைபாடேயாகும். அப்படியிருக்க மாறுபட்ட கோட்பாட்டாளர்களின் போட்டியில் தவறு நேர்ந்திருக்கலாம்.

ஒரு அல்லது சில வேட்பாளர்கள் யு.என்.பி செல்லும் தமிழ் வாக்குகளை தடுப்பதை விடுத்து தங்களுக்குள்ளேயே மோதியதில் தவறுகள் இடம் பெற்றுள்ளன இவை உணரப்பட்டு திருந்திய ஓர் முற்போக்கு அமைப்பாக தமிழர் மகாசங்கம் செயலாற்ற வேண்டும். பாராளுமன்ற உறுப்புரிமை கிடைத்துள்ள இந்நிலையில் கட்சி சார்பற்ற இவ் அமைப்பு உச்ச வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்க அதி உன்னதமான சூழல் அமைந்துள்ளதை 'வரப்பிரசாதமாக கொள்ள வேண்டும்.

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

## ஆசிரியர் தின விழா

(மண்முனைப் பற்று நிருபர்)

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை ஆசிரியர் தின விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் இப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவமணிகளினால் கௌரவிக்கப்படவுள்ளனர் எனவும் இப்பாடசாலை மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கடலில் மூழ்கி மரணம்

(துறைநீலாவணை நிருபர்)

துறைநீலாவணைக் கடலில் கந்தசஷ்டி விரதக் கும்பம் சொரியச் சென்ற சிறுவன் ஒருவன் கடலில் மூழ்கி மரணமடைந்துள்ளான்.

இச்சம்பவம், வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. துறைநீலாவணையைச் சேர்ந்த கிருபைராசா மோகனதாஸ் என்பவரே மரணமான சிறுவன் ஆவார். இவரது உடல் நேற்று பிற்பகல் நீலாவணைக் கடலில் இருந்து மீட்கப்பட்டது.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## போர் வெற்றிகளை விட...

விடுதலைப் புலிகளைப் போரில் அழித்து ஒழித்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்போமென்று தேர்தல் பிரச்சார மேடைகளில் இலங்கையின் பிரதமர் இரத்தினசிறி விக்கிரம நாயக்கா போர் முழக்கம் செய்து வந்து இரண்டு மாதங்கள் கூட நிறைவேறவில்லை.

இலங்கையின் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் கூட போரில் புலிகளை முறியடித்தே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறியிருந்தார்.

நோர்வேயின் மத்தியஸ்த முயற்சி முடிந்து போன விஷயமென்றும் பிரதமர் விக்கிரம நாயக்க சொல்லியிருந்தார்.

மத்தியஸ்த முயற்சியை இலங்கையின் தேர்தல் முடிவடையும்வரை சிறிது ஒத்தி வைத்திருந்த நோர்வே அரசிடம் தேர்தல் முடிந்ததும் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் தனது வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அமைதித் தீர்வு காண்பதற்கு நோர்வே அரசு தனது மத்தியஸ்த் முயற்சியைத் தொடர வேண்டுமென்று நோர்வே அரசிற்கு அனுப்பி வைத்த கடிதத்தில் சந்திரிகா அம்மையார் கேட்டிருந்தார்.

வெளிநாடு செல்லும் போதெல்லாம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளென்றும் அவர்களுக்கு இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் உண்மையான நாட்டமில்லையென்றும் நோர்வேக்குப் போகும் போதும் சொன்னார். ஜப்பானுக்குச் சென்று இதையே கூறிவிட்டுவரும் வழியில் தாய்லாந்தின் தலைநகரிலும் புலி எதிர்ப்புப் பாடலைப் பாடியதுடன் தேர்தல் காலத்தில் பலதையும் பேசுவது எல்லா நாடுகளிலுமுள்ள வழக்கம் தான். இந்த வகையில் தான் பிரதமர் விக்கிரமநாயக்காவும் நோர்வே மத்தியஸ்தம் பற்றிக் கூறியதும் என்று விளக்கம் கொடுத்திருந்தார்.

ஆனால் விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பது என்று ஜனாதிபதி சந்திரிக்காவும் பிரதமர் இரத்தின சிறி விக்கிரமநாயக்கவும் கூறியதைச் சிங்களப் பேரின வாதிகள் வெறும் தேர்தல் பிரச்சாரப் பேச்சாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இதன் விளைவுகளில் ஒன்றுதான் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் அரசின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிராயுத பாணிகளான தமிழ் இளைஞர்கள் இருபத்தாறு பேர் சிங்களப் பயங்கரவாதக் காடையர்களால் குத்தியும் வெட்டியும் குதறியும் தீ வைத்துக் கொளுத்தியும் கோரமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவமாகும்.

புலிப்பயங்கரவாதிகள் ஒழிப்பு என்ற பிரச்சாரமும் நோர்வே சமாதான முயற்சி முடிந்தது எனும் மேடைப் பேச்சும் " பயங்கரவாத ஒழிப்பு " என்பது தமிழின ஒழிப்பு என்ற கொலை வெறியைத் தூண்டி விட்டது.

தேர்தல் பிரச்சாரத்தின் விளைவுகளைச் சிந்தித்தோ இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடு விரைவில் நடைபெறவிருப்பதை உத்தேசித்தோ அல்லது போரின் விளைவுகளால் நாடு இனித் தலையெடுக்க முடியாதென்ற கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதால் உண்மையிலேயே நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை மீண்டும் தொடரும்படி சந்திரிக்கா அம்மையார் கேட்டிருக்கக் கூடும்.

நோர்வே அரசின் விசேட சமாதானத் தூதுவர் இலங்கைக்கு வந்து வடக்கே விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குச் சென்று தலைவர் பிரபாகரனை சந்தித்துப் பேசித் திரும்பியது பிரதம மந்திரி இரத்ன சிறி விக்கிரமாநாக்கவிற்கு கூட தெரியாமலிருந்தது பேரினவாதிகளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

இப்பொழுது இராணுவப் புடைத்தளபதி கூட போரில் புலிகளை அழித்து ஒழிப்பது பற்றித்தான் பேசுகிறார்.

சமாதானம் விரும்பும் பெரும்பான்மையான மக்கள் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியை வரவேற்கிறார்கள். போரின் மூலம் ஆதாயம் பெற்றவர்களும் பெறுபவர்களும் போரை விரும்புகிறார்கள்.

நவீன ஆயுதங்களும் நவீன போர்க்கருவிகளும் வாங்கிக் குவித்திருப்பதால் போருக்கு ஆட்பலம் தான் தேவையென்றும் ஆட்களைப் படையில் சேர்ப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் படைத்தளபதி வேண்டுகோள் விடுக்கிறார்.

இதே சமயம் படையில் சேர்ந்து மாண்டவர்களினதும் காணாமல் போனவர்களினதும் பெற்றோர் போரை நிறுத்தி அமைதித்தீர்வு காண வேண்டுமென்று கண்ணீருடன் கோரிக்கை விடுக்கின்றனர்.

போரில் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இருப்பவர்களே போர் தொடர வேண்டுமென்று கேட்கிறார்கள் என வவுனியா பௌத்த பிக்கு சரியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கும் விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் ஆக்க பூர்வமாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் பேச்சு வார்த்தை நடத்த அரசு முன்வர வேண்டும்.

நல்ல நோக்கத்துடன் துணிவுடன் சந்திரிக்கா இதற்கு முன்வந்தால் பேச்சு வார்த்தை வெற்றியடையும்.

" போர் வெற்றிகளை விடப் புகழ் பெற்ற வெற்றிகள் அமைதிக்கு இருக்கின்றன " என்ற மில்ற்றனின் வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவை என்பதை மட்டும் நினைவூட்டுகிறோம்.

# நம்பிக்கையின் அடிப்படையிலேயே முக்கிய கடமைகள் கட்டப்படுகின்றன

## நோர்வே சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெயிம்

**வன்னியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்தித்த நோர்வே பிரதிநிதிகள் கொழும்பு திரும்பியதையடுத்து நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் சமாதானத்தூதுவர் திரு. எரிக்சோல்ஹெய்ம் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார். அவற்றின் விபரம் பின்வருமாறு.**

**கேள்வி:-** திரு. பிரபாகரன் யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தினை திருப்பியழைக்கும் படியும், உணவு,மருந்து, முதலியவைகளை வழங்குவதற்கானதனை உத்தரவை நீக்கும்படியும்,யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும்படியும் கேட்டுள்ளதாக செய்தி சேவைகள் அறிக்கை வெளியிட்டுள்ளன. அவர் வேறு ஏதேனும் விடயங்களை சமர்ப்பித்தாரா?

**பதில்:-** நாங்கள் புரிந்து கொண்டதன் அடிப்படையில், திரு. பிரபாகரன் முன் நிபந்தனை எதனையும் முன்வைக்கவில்லை. எனினும் அவர் சமாதானத்தை பாதுகாப்பதற்கான காரியங்களை ஆரம்பிப்பதற்கான பல சாத்தியக் கூறுகளை நன்றாக பரிசோதனை செய்து கலந்துரையாடினார். பின் நாங்கள் இதற்கான ஆரம்ப கட்டங்களுக்கு எவ்வாறு வருவது என்பது பற்றியும், ஏனைய கட்சிகளிடம் இத் திட்டங்களை எவ் வகையில் எடுத்துச் சென்றால் சமாதானம்பற்றிய சாத்தியக்கூறுகள் உள்ளன என்பது பற்றியும் கலந்துரையாடினோம். ஆனால் அவர் குறிப்பிட்ட திட்டங்கள் சமபந்தமாக நான் எதனையும் தெரிவிக்க முடியாது. இந்த விடயங்களின் அடிப்படைக் கொள்கைகள் சம்பந்தமாக நாங்கள்இந்த பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கமுடியாவிட்டாலும் அரசாங்கமோ அல்லதுவேறுகட்சியோ விருப்பப்பட்டால்மக்களுக்குத் தெரிவிக்கலாம்.

**கேள்வி:-** இலங்கைப் பிரச்சினை தொடர்பாக சர்வதேசத்தின் நிலைப்பாட்டை திரு. பிரபாகரனிடம் தெரிவித்ததாகச் சொல்லியிருக் கின்றீர்கள். அதைப் பற்றியும் நீங்கள் சுருக்கமாக விபரிக்க முடியுமா?

**பதில்:-** இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் ஓர் அடிப்படைக் கொள்கை உள்ளது. முதலாவதாக முழு சர்வதேச சமூகமும்இப்பிரச்சினை சமாதானமான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என விரும்புகிறது. ஆனால் இச் சமாதானம் இரு விடயங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.முதலாவதாக இலங்கையில் இரு சுதந்திர பிரதேசங்கள் இருக்க முடியாது. இந்தஇலங்கையின் பிரச்சினைக்கான தீர்வு மிக நேர்மையானதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இரண்டாவது இலங்கை உருக் குலையாத நிலையில் தமிழர்களது அவா இத்தீர்வின் உண்மைப் பண்புகள் மூலம் எட்டப்படல் வேண்டும்.

**கேள்வி:-** முல்லைத்தீவில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்தன. அவை பற்றி நீங்கள் ஏதேனும் நடவடிக்கைகளை மேற் கொள்வீர்களா?

**பதில்:-** அவை பற்றி எங்களிடம்தகவல்கள் ஏதுமில்லை. நாங்கள் ஒவ்வொரு நாளும் நடக்கும் பிரச்சினைகளோடு உறவாட பிரயாசைப்படுவதில்லை. நாங்கள் சமாதான முயற்சிகளை மேற் கொள்வதற்கு முதல் இவர்கள்யுத்தத்தை நிறுத்து வார்கள் என எதிர்பார்க்கவில்லை. இப் பிரச்சினைகளின் உண்மை நிலையைப்பற்றி விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் கவலைப்பட வேண்டும்.

**கேள்வி:-** யுத்தநிறுத்தம் அமுலுக்கு வருவது பற்றி ஏதேனும் கலந்துரையாடினீர்களா?

**பதில்:-** நான் இது விடயமாக உங்களோடு பேச முடியாது. நாங்கள் எந்த விடயத்திலும் ஜீவகளையுள்ள நல்லவைகளையே காண்பதற்கு மட்டுமே உள்ளோம் என்பதனை உங்களுக்குதெரிவிக்க விரும்புகிறேன்.

**கேள்வி:-** திரு.பிரபாகரன் அவர்கள் சர்வதேசசமூகத்தின் அபிலாசைகளுக்குஒத்துழைப்பு வளங்குவதாக தெரிவித்தாரா?

**பதில்:-** நான் இவைகளைப் பற்றிய விமர்சனங்களை தெரிவிக்க முடியாது. அவர் குறிப்பிடும் விடயங்களே அதற்கான விமர்சனங்களாக இருக்கும். ஆனால் நாங்கள் சர்வதேச சமூகத்தின் கொள்கைகளை அறிவுறுத்திக்கூறினோம்.

**கேள்வி:-** நீங்கள் இலங்கைஅரசிடம்இருந்து ஏதேனும்செய்திகளை திரு.பிரபாகரனிடம் எடுத்துச்சென்றீர்களா?

**பதில்:-**இல்லை....

**கேள்வி:-** ஜனாதிபதியும் பிரபாகரனும் நேரடியாக பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வது பற்றி ஏதேனும் கேள்விகள் எழுந்தனவா?

**பதில்:-**இல்லை....

### நோர்வே சமாதான முயற்சியில் ஜனாதிபதி ஆர்வம்

**கேள்வி:-** கடந்தமாதம் ஜனாதிபதியும் வெளிநாட்டமைச்சரும் நோர்வேஜியர்களின் வரவு ஸ்தம்பித நிலையினை அடைந்து விட்டது எனக் கூறினார்கள். இப்போது அது அந்த நிலையினை இருந்து உண்மையான நிலைக்கு வந்து விட்டதாக நம்புகின்றீர்களா?

**பதில்:-** நீங்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமிதனை. வெளிநாட்டமைச்சரது அண்மைய நோர்வே பயணத்தின் போது ஜனாதிபதியிடம் இருந்து ஓர் கடிதத்தை கொண்டுவந்திருந்தார். அதில் இலங்கை நோர்வே சமாதானமுயற்சிகளை தொடருவதில்ஆர்வமாக இருப்ப தாக தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையிலேயேஇம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கேள்வி:-** உங்களது தீர்மானங்களில் ஏதேனும் குறுகிப் போகும்தன்மையையோ, தீர்வுகளின் முடிவுகள் வெளியாவதையோ காண்கின்றீர்களா?

**பதில்:-** நாங்கள் தீர்வுகளின் முடிவுகள் வெளியா வதை காண்கின்றோமா?என்றா கேட்கின்றீர்கள். இலங்கை மக்கள் நிமித்தம் நாங்கள் பல மணி நேரங்களை செலவழித் துள்ளோம். நாங்கள் இவ் விடயம் நம்பிக்கையற்றதுஎன நினைத்திருந்தால் இவ் விடயத்தில் மிகுந்த அக்கறை எடுத்திருக்க மாட்டோம். இதே வேளை இப் பிரச்சினை 17 வருடங்களுக்கு மேற்பட்டது. எனவே யாரும் இப் பிரச்சினையை வெகு இலகுவாக தீர்த்து விடலாம் என எதிர்பார்க்க முடியாது. இதை அண்மைக் காலங்களில் தீர்க்க முடிந்தாலும் மிகவும் சிக்கலான தீர்வாக இது இருக்கும். ஏனைய சமாதான முயற்சிகளை நோக்கும் போது கூட உதாரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வாறான அணுகு முறைகள் நீண்ட காலம் எடுக்கும்.

**கேள்வி:-** நீங்கள்தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து ஏதேனும்செய்திகளை ஜனாதிபதிக்கு எடுத்துச் செல்கிறீர்களா?

**பதில்:-** நாங்கள் செய்திகள் எதனையும் எல்.ரீ.ரீ.ஈயிடம்இருந்துகொண்டு செல்லவில்லை.ஆனால் ஜனாதிபதியோடு நாங்கள் பிரபாகரனோடுங்கூட விடயங்களை கலந்துரையாடினோமோ அவைகளைப்பற்றிக் கலந்துரை யாடுவோம்.

**கேள்வி:-** நீங்கள் ஜே.வி.பி [illegible] கட்சிகளோடு இது விடயமாக கலந்துரையாடியுள்ளீர் களா?

**பதில்:-** எமது தூதாலயம்ஜே.வி.பியோடு உரையாடியுள்ளது. நாங்களும் நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் முதலிய முக்கிய பெரிய கட்சிகளோடு உரையாட முயற்சி செய்துகொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:-** உங்களது அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?

**பதில்:-** எங்களதுநிலை இங்கிருக்கும் பிரச்சினைக்குரிய இரு கட்சிகளுக்கும் சேவை செய்வதே. ஆகவே நாங்கள் எதைப்பற்றியும் ஜனாதிபதியுடனும், எல்.ரீ.ரீ.ஈயுடனும் கலந்துரையாடுவோம். ஆனால் நாங்கள் எதுவிதமானபெரிய நடவடிக்கைகளிலும் இறங்க முடியாது. ஆகவே நாங்கள் பாதுகாப்பின் நிமித்தம் ஒரு கட்சியையும் சார்ந்திருக்க முடியாது.

**கேள்வி:-** சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க எவ்வளவு காலம் எடுக்கும்?

**பதில்:-** இதுசம்மந்தமான விமர்ச னங்களை தெரிவிக்க முடியாது. அதுசிலகிழமைகளோ வருடங்க ளோ எடுக்கலாம். நான் குறிப்பிட்டு எதையும் சொல்ல

*(4 பக்கம் பார்க்க)*



# விளையாட்டுச் செய்திகள்

## அஸாருதீன் அணியின் வெற்றிக்கு முழு ஒத்துழைப்புத் தரவில்லை



கிரிக்கட் சூதாட்டம் பற்றிய விசாரணைகளின் போது சி.பி.ஐ அதிகாரிகளிடம் கிரிக்கட் வீரர்கள் பலர் சாட்சியம் அளித்திருந்தனர் இதில் இறுதிக்கட்டமாக இந்திய அணியின் முன்னாள் தலைவராக இருந்தவர் என்ற வகையில் சச்சின் டெண்டுல்கரிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது டெண்டுல்கர் கூறியதாவது:-

நான் அணியின் தலைவராக இருந்தபோது சூதாட்டத் தரகர்களுடன் அசாருக்கு தொடர்பு இருந்தது. அணியின் வெற்றிக்காக 100சதவீதம் தனது பங்களிப்பை அவர் செலுத்தவில்லை. இந்திய வீரர்கள் பலருக்கு தரகர்களை தொடர்புபடுத்திக் கொடுப்பதிலும் அசார் முக்கிய பங்காற்றி இருந்தார். இவ்வாறு டெண்டுல்கர் கூறிய தகவல்களை சி.பி.ஐ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## கடைசி பந்தில் தென்னாபிரிக்கா நியூசிலாந்தை வீழ்த்தியது

நியூசிலாந்திற்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் இடையே நடைபெற்ற இறுதிமற்றும்6-வது ஒருநாள் போட்டியில், தென்னாப்பிரிக்கா கடைசி பந்தில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த இறுதி ஒருநாள் போட்டி நியூலாண்ட்ஸ் நகரில் நடந்தது. நியூசிலாந்து அணி துவக்கத்தில் தடுமாறியது. பின்னர் கணிசமான ஸ்கோரை எட்டியது.

துவக்க வீரர்களான நெவின் 12ரன்னிலும், ஆஸ்ட்லே மற்றும் பிளமிங் ஆகியோர் 8 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். 39 ரன்களில் நியூசிலாந்து 3 விக்கெட்டை இழந்து திணறியது. பின்னர் வந்த ரோஜர் டுவோஸ் மற்றும் ஆல்ரவுண்டர் கிறிஸ் கெய்ர்ன்ஸ் ஆகியோர் நிலைத்து ஆடி, அணியின் சரிவை மீட்டு 200 ரன்களை தாண்ட உதவினர்.

ரோஜர்டுவோஸ் சதமடித்தது(103) ஆட்டத்தின் சிறப்பம்சமாகும். கெய்ர்ன்ஸ் 84 ரன்கள் எடுத்தார். இருவரும் இணைந்து4-வது விக்கெட்டிற்கு 150 ரன்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

இறுதியில் நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 256 ரன்களை எடுத்தது. தென்னாப்பிரிக்கா தரப்பில் டெலி மேச்சஸ் அபாரமாக பந்து வீசி 30 ரன்கள் மட்டும் கொடுத்துமூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

போலக்2 விக்கெட்டுகளையும், டொனால்டு மற்றும் போஜே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நியூசிலாந்துபோலவே தென்னாப் பிரிக்காவும் முதலில் திணறியது. 30ரன்களில்மூன்று விக்கெட்டுகளை இழந்தது. கல்லினன் 10 ரன்னிலும்,காலிஸ் பூஜயத்திலும், போஜே 8 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் ஜான்டி ரோட்ஸ் மற்றும் கீப்பர் பௌச்சர் ஆகியோர் நிலைத்து ஆடி, அணியின் எண்ணிக்கையை அதிகரித்தனர். ரோட்ஸ் அதிகபட்சமாக 69 ரன்களையும், பௌச்சர் 46 ரன்களையும் எடுத்தனர். மீண்டும் தென்னாப்பிரிக்க அணிக்கு சோதனை ஏற்பட்டது. அது 189 ரன்களில் 7 விக்கெட்இழப்புஎன்ற நெருக்கடியானநிலைக்கு தள்ளப்பட்டது.

அப்போது ஆல்ரவுண்டர் குளூஸ்னர், அறிமுக வீரரான ஷபீன் அப்ரஹாம்கூடன் இணைந்து அணியைவெற்றிப் பாதைக்குஅழைத்துச் சென்றார். அணி இக்கட்டான நேரத்தில் தவித்துக் கொண்டிருந்த வேளையில்அவர் துணிச்சலுடன் போராடி, பந்துகளை நாலாபுறமும் விரட்டி ரன்களை குவித்தது பாராட்டப்படவேண்டிய அம்சமாகும். அவர்59ரன்களுடன் ஆட்டமிழக் காமல் இருந்தார். இதில் 4 சிக்சர்களும்,இரண்டு பவுண்டரிகளும் அடங்கும்.

நியூசிலாந்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளிலேயே தென்னாப்பிரிக்காவின் அதிகபட்ச ஸ்கோர் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாப் பிரிக்காவெற்றியின் கதாநாயகன்லான்ஸ் குளூஸ்னர் தான் என்றால் அதுமிகையல்ல. அவரதுதுணிசசலான ஆட்டத்தால் தான் தென்னாப்பிரிக்காஅணி இந்த மைதானத்தில் அதிகபட்ச ஸ்கோரை எட்ட முடிந்தது.

கடைசி ஓவரில் 11 ரன்கள் தேவைஎன்றநிலை தென்னாப்பிரிக்காவிற்கு ஏற்பட்டது. இந்த ஓவரை நியூசிலாந்தின் மிதவேகப்பந்து வீச்சாளர் ஷோன் ஓ கானர் வீசினார்.

லான்ஸ் குளூஸ்னர் கடைசி இரண்டு பந்துகளில் பவுண்டரி அடித்து அணியை வெற்றி பெறவைத்தார். ஒரு கட்டத்தில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற வழியில்லை என்று கருதப்பட்டது.

6 ஒருநாள் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் தென்னாப்பிரிக்கா 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. ஒரு போட்டிமழையால் கைவிடப் பட்டது.

## விளையாட்டு கழகங்களின் தகவல் சேகரிப்பு

(ஐ.எல்.ஜலீல்)

முதலாம் கட்டமாக விளையாட்டு அமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இயங்கும் கழகங்களுக்கிடையிலானகுழு.மற்றும் விளையாட்டுப் போட்டிகள்நடாத்த வேண்டியுள்ளதால் கீழ் காணும் தகவல்களை பூரணப்படுத்தி எதிர் வரும் கார்த்திகை மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்முனை பிரதேச விளையாட்டு அதிகாரி ஏ.சப்றி நஸார் வேண்டிக் கொள்கின்றார்.

கழகத்தின் வருடாந்த பொது அறிக்கை(2001), நிர்வாக சபைத்தெரிவு, அங்கத்தினர் பட்டியல்(2001), கழக சட்ட திட்டம், கழக காரியாலய விலாசம், கழகம் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவு, சமுர்த்தி உத்தியோகஸ்தர், பயிற்சி பெறும் மைதானம், கழகம் சூடிய வெற்றிகள் போன்ற தகவல்களை அனுப்புமாறு சகல விளையாட்டுக்கழகங்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

## 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி



கமு/அல்-மிஸ்பாஹ் வித்தியாலயம் கல்முனை ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளை பெற்று சித்தியடைந்த செல்வி. ஏ.ஆர்.பாத்திமா றிகாஸா கல்முனையைச்சேர்ந்த எம்.எம். அப்துல் றசாக் ஆசிரியை எம்.எஸ்.றஹீமா (குயீனா) ஆகியோரின் ஏக புதல்வியாவார்.

## இலங்கையின் சாதனைகள்

- ◆ சிறந்த பந்து வீச்சு ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுக்கள் முரளி
- ◆ 245ஓட்டங்களால் வெற்றி
- ◆ சார்ஜாவில் எதிரணியின் மிகக் குறைந்த ஓட்டங்கள் - 54
- ◆ இந்தியாவின் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை 54
- ◆ 37-7அக்கிப் ஜாவிட் (பாக்) எதிர் இந்தியா 1991 சார்ஜா
- ◆ 233ஓட்டங்கள் பாக் எதிர் பங்களாதேஷ்/ சார்ஜா.2000
- ◆ மே.இந்தியா - 55ஓட்டங்கள்

# வாசகர் நெஞ்சம்

## போலியான, பொன்னாங்கண்ணியும், உப்பும் மட்டக்களப்புச் சந்தையில்! பொது மக்கள் கவனம்!

மட்டக்களப்பு பொதுச் சந்தையிலும், வெளிவியாபார இடங்களிலும் அயடீன் கலக்கப்பட்ட உப்பு என்று போலி உப்பை பொது மக்களுக்கு விற்பனை செய்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் த.இராஜசேகராவின் துரித நடவடிக்கையின் காரணமாக இப்போலி உப்பைக் கைப்பற்றி பாவனைக்கு உகந்ததல்ல என்று ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த போலி உப்பில் களிமண், கழிவுகள், சிறுபிகள் போன்றவை இருப்பதாகவும் இவற்றை மக்கள் வாங்குவதில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும், உப்பில் அயடீன் பற்றிய ஒழுங்கு வசதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இப்படியிருக்க போலி பொன்னாங்கண்ணிக் கட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தம்புள்ள பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட பொன்னாங்கண்ணி இனத்தைச் சேர்ந்த ஒரு வித புல்லினம் என்றும், இதன் தண்டுகள் குழாய் போன்றும், இலை விழிம்புகள் சொரு சொருப்பாகவும் சிறு சிறு வெட்டுக்களாகவும் காணப்படும் எனவும் இதை, உணவில் சேர்த்துக் கொள்வதால் சிறு நீரகம் பாதிக்கப்பட்டு செயலிழக்க நேரிடும் என்றும் தெரிய வருகிறது. ஆகவே பணம் பெறும் நோக்கில் மக்களைக்கொல்லும் இப்படியானவற்றை வியாபாரிகள் விற்பனை செய்வதை உடன் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**எம். சோமசுந்தரம்**
**மட்டக்களப்பு**

## எனக்காக இரக்கம் காட்ட எவருமே இல்லையா? ஒரு வயோதிபரின் பிரலாபம்!

பொது மக்களே! அன்புள்ள தாய்மாரே! எனது வாழ்க்கையைப்பற்றி நினைத்தால் எனக்கு பழைய சினிமாப் பாடல் ஒன்று தான் நினைவுக்கு வருகிறது

"ஊரும் இல்லை நாட்டிலே
உறவும் இல்லை வீட்டிலே
ஏன் பிறந்தேன் உலகிலே........."

எனக்கென்று உரிமை கோர ஒருவருமில்லை எனக்கோ 70வயது. சரியாக நடக்க முடியாமல் தள்ளாடுகிறேன். இந்நிலையில் பத்து வருடத்துக்கு முதல் கத்தோலிக்க வயோதிபர் மடத்துக்குருவான பிதா றொபா ஒக்சோஸ்சைக் கொண்டு ஒரு சிபார்சுக் கடிதம் பெற்று இம் மடத்துக்கு விண்ணப்பம் செய்தேன். ஆனால் ஐந்து வருடங்கள் கடந்தும் என்னை அங்கே சேர்க்கவில்லை.ஆனால் என்னைச் சிபார்சு செய்த பிதா வயோதிபர் மடத்தில் இருந்து விட்டு சுகயீனம் காரணமாக காலமாகிவிட்டார்.

இதன் பின்பு 1995ம் ஆண்டில் தற்போது தாண்டவன்வெளியில் கடமையாற்றும் பங்குத்தந்தை குருவான தேவாவைக் கொண்டு சிபார்சுக்கடிதம் வாங்கி மீண்டும் என்னைச் சேர்க்குமாறு மனுச்செய்தேன். அதற்கும் கூட என்னைச் சேர்க்காது விட்டுவிட்டார்கள். இதன் பிறகு நான் இடையிடையே அங்கு சென்று என்னைச் சேர்க்கும் படி கேட்டேன். ஒரு நாள் நான் போன வேளை மடத்தில் அங்கிருந்த வயோதிபர்கள் ஆண்களும் பெண்களுமாக சண்டை போட்டதைக் கண்டேன். உடனே நான் இது பற்றி விசாரித்த போது "அவர்களுக்கு சாப்பாடு கூடிவிட்டது நீ உன் வேலையைப் பார்த்துவிட்டுப் போ" என்று அங்கிருந்தவர்கள் என்னைப் போகச் சொன்னார்கள்.எவ்வாறாயினும் என்னை மடத்தில் சேர்க்கவே இல்லை.

என்னைப்போன்ற வயோதிபர்களுக்காகத்தானே இந்த மடம் இயங்கி வருகிறது. ஏன் என்னை இவர்கள் சேர்க்கத் தயக்கம் காட்டுகிறார்களோ தெரியவில்லை. இதை நினைத்தால் எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் நிற்கிறேன். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இனிமேலாவது எனக்காக கருணை காட்டுவார்களா?

**ஜே.அன்டனி**
**மட்டக்களப்பு**

## *தினக்கதிர் வாசகர் வட்ட ஆலோசகரின் வாழ்த்து!*



கிழக்கிலிருந்து உதயமாகி தினந்தோறும் எம் கரங்களில் தவழும் கதிரின் 200வதுஇதழுக்கு இன்முகங் கொண்டு மருதமுனை தினக்கதிர் வாசகர் வட்டத்தின் ஆலோசகர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் இடம்பிடித்துவரும் இப்பத்திரிகை எதிர்காலத்திலும் வாசகர் வட்ட அங்கத்தவர்களின் ஆக்கங்களை பெருமனங்கொண்டு பிரசுரிப்பதன் மூலம்ஊடகத்துறையில் ஊக்கமுள்ளவர்களை உருவாக்குவதோடு இப்பத்திரிகையின் அறிமுகத்தையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

இனிவரும் காலங்களிலும் இக்கதிர் தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்

**ஜனாப்.எம்.என்.எம்.அப்துல் காதர் (M.Sc)**

# திருமலையில் தொண்டராசிரியர் போராட்டம் தொடர்கிறது.

(குமார்)

## திருமலையில் தொண்டராசிரியர் போராட்டம் தொடர்ந்து இரண்டாவது நாளாக நடைபெறுகின்றது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டத்தில் 150 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இன்று இப்போராட்டத்தில் இணைவதற்காக மூதூர் கந்தளாய் பகுதியில் இருந்தும் தொண்டராசிரியர்கள் வந்து சேருவார்கள் என சங்கத்தின் செயலாளர்கள் ஜோகி ஜே.இதயரஞ்சன் தெரிவித்தார்.

மேலும் எமது போராட்டத்தின் போது கல்வி அமைச்சிலிருந்து எந்த ஒரு அதிகாரிகளும் எம்மிடம் தொடர்பு கொள்ளாதது எமக்கு வேதனையைத் தருகிறது. தொண்டராசிரியர் போராட்டத்தின் போது பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. எமக்கு ஆரம்பத்தில் அச்சத்தை தந்தாலும் தற்போதய பாதுகாப்பு எமக்கு மனநிறைவைத் தருகிறது என்றும் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள துரித நடவடிக்கை எடுப்பேன்

(ஓட்டமாவடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு மீன்பிடித்துறையினையும் கடற்றொழில் சம்பந்தமான பிரச்சினைகளையும் இனங்கண்டு அவைகளை துரித கதியில் நிவர்த்திக்கத்தக்கவாறான பல திட்டங்களை வகுத்து செயற்பட உத்தேசித்துள்ளேன்.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்துறைபிரதியமைச்சர் அல்ஹாஜ் முகைதீன் அப்துல் காதர் தெரிவித்தார்.ஓட்டமாவடி பொது விளையாட்டரங்கில் ஏற்பாடாகியிருந்த வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது தொகுதிக்கு வருகை தந்த பிரதியமைச்சரை ஓட்டமாவடி, மீராவோடை, வாழைச்சேனை பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ரிஜிதென்ன கிராமத்திலிருந்து பிரதான வீதி வழியாக ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

ஓட்டமாவடி பிரதேசத்திற்கு வருகை தந்த பிரதியமைச்சர் ஓட்டமாவடி மீரா ஜும்ஆ பள்ளிவாயல், ாழைச்சேனை ஜும்ஆ பள்ளிவாயல் ஆகியவற்றில் ஏற் பாடாகியிருந்த விஷேட துஆப் பிரார்த்தனையில் கலந்து கொண்டதன் பின் ஓட்டமாவடி தேசிய பாடாசலை சந்தியில் இருந்து கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ பொது விளையாட்டரங்கிற்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் இதுவரை காலமும் கிழக்குக்கு வழங்கப்படாதிருந்த முக்கிய அமைச்சிப் பொறுப்பு தற்போது கிழக்குக்கு அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கிடைத்திருப்பதையிட்டு சந்தோஷமடைவதோடு . இறைவனுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

எமது பகுதி மக்கள் காலா காலமாக செய்து வருகின்ற தொழில்களில் மீன்பிடித் தொழில் முக்கிய இடத்தை வகிப்பதோடு அதிக வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாகவும் அது உள்ளது. ஆகவே இதனை துரித கதியில் அபிவிருத்தி செய்வதோடு மீனவர்களின் நலன் காக்கும் விஷேட பல திட்டங்களையும் அமுல்படுத்த எண்ணியுள்ளேன்.

எனக்கு கிடைத்திருக்கும் இவ் வமைச்சுப் பொறுப்பானது. இம்மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகவே நான் கருதுகிறேன்.ஆகையால் இதில் எவ்வித பாகுபாடுகளுமின்றி பதவிக்காலம் முழுவதும் சிறப்பான சேவைகளைச் செய்து மக்களின் துயர் போக்க நிச்சயம் எமது ஒற்றுமையான நல்லுறுவுகள் எமது சேவைக்கு பலம் சேர்க்கும் என நம்புகிறேன் என்றார்.

இவ்விழாவில் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.




## பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு மௌலானா எம்பி.சென்றார்.

(ஏறாவூர் நிருபர்)

செங்கலடி -ரமேஷ்புரம் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை மற்றும் காயமடைந்த குழந்தை மற்றும் காயமடைந்த பொதுமக்களது வீடுகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா நேற்று திங்கட்கிழமை சென்றார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர் ஆறுதல் கூறியதுடன் இறந்த குழந்தையின் மரணச் சடங்கின் செலவுக்காக பண உதவியும் செய்தார். அதனுடன் எறிகணைத் தாக்குதலால் சேதமடைந்த செங்கலடி செபஸ்டியன் தேவாலயம் மற்றும் பாடசாலையையும் பார்வையிட்டார்.

எறிகணைத் தாக்குதலில் பத்து வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வாழும் உரிமை தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது !

### பத்திரிகையாளர் டி. சிவராம்

((அரியம்)

இலங்கைப் பிரஜை ஒருவன் சித்திரவதைக்குட்படுத்தப்படக் கூடாது. வாழும்- உரிமையை மதித்து நடக்கவேண்டும். இது இலங்கையின் சட்டக் கோவையின் பொதுவான விதி ஆனால் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது

இவ்வாறு மூத்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான டி. சிவராம் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் நேற்று முன்தினம் தமிழர் மறுமலர்ச்சிக் கழகத்தினால் இடம்பெற்ற தமிழர்களும் அவர்களின் ஜனநாயக உரிமைகளும் எனும் தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய டி. சிவராம் தொடர்ந்து பேசுகையில்

தமிழ் மக்களைப் பொறுத்த வரை இன உரிமைக்காக போராடி வரும் அவர்களது இருப்பை, வாழ்வுரிமையை, அடிப்படை உரிமையை சீரழித்துள்ள அவசர காலச் சட்டமானது கடந்த மே மாதம் விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள் மூன்றின் மூலம் ஆனையிறவைக் கைப்பற்றிய பின் அவசர காலச்சடத்தின் 17வது, 18வது விதிகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டன. இதன் மூலம் பத்திரிகையை மூடிவிடுதல், வாகனங்களை தடுத்து வைத்தல் வகை தொகையின்றி சந்தேகம் என்று நினைத்த மாத்திரத்தில் கைது செய்தல் என்பன அதிகரித்துள்ளன.

கேட்போர் பார்ப்போர் இன்றி வழக்கிழக்கு தமிழர்களும், மலையகத் தமிழர்களும் கைது செய்யப்பப்படுகின்றனர். தடுத்து வைக்கும் இடங்கள் எவையெனத் தெரியப்படுத்த வேண்டும் என்ற அவசியமும் இல்லையென அவசரகாலச்சட்ட விதியில் கூறப்பட்டுள்ளது.

இதையிட்டு சர்வதேச ம்ன்னிப்புச்சபையானது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. மே மாதத்தின் பின் சிறைகளில் தடுத்து வைத்துள்ள தமிழ் இளைஞர்கள் காணாமல் போகும் வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளது. இச்சட்டத்தை பாராளுமன்றத்தில் மாதா மாதம் நிறைவேற்றுவதற்காக நாம் வாக்குப்போட்டு தமிழர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமா ?

கடந்த தேர்தலின் போது பல இலட்ச ரூபாய்களை செலவு செய்து பாராளுமன்றம் சென்றவர்கள் குறைந்து சில ஆயிரம் ரூபாய்களையேனும் தமிழர்களின் விழிப்புக்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் செலவு செய்வார்களா ?. எனவும் கேள்வி எழுப்பினார். தமிழர் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிர்வாக உறுப்பினரும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் செயலாளருமான இரா. துரைரெட்ணம் தலைமை உரையாற்றுகையில்

தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் எந்தவித தேர்தல் நோக்கத்திற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட கழகம் இல்லை.. தமிழ் மக்களை விழிப்படைய வைக்கவும் அவர்களிடம் தமிழ் மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தி வெறுமனமே மௌனமாக இருக்காமல் மக்கள் சக்தியாக மாறி தமது இனத்திற்கு துன்பம் வரும்போது துணிவுடன் தட்டிக்கேட்க தயங்காமல் முன்வர வேண்டும் என்பதை மக்களிடத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்து வதற்காகவே இக்கழகம் ஆரம்பமானது என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் திரு. கிருஷ்ணமோகன் தனதுரையில் எம்மைக் கொல்வதற்கு எம்மக்களைக் கொண்டு வாக்களித்து பாராளுமன்றத்தில் ஆறுவருடத்திற்கு ஒருதடவை அனுப்புகிறோம் இங்குள்ள அரசியல் கொழும்புமைய அரசியலாகும் தேர்தலுக்கு மட்டும் தமது பகுதிக்கு வாக்கு கேட்டு வருபவர்கள் தேர்தலில் வெற்றியீட்டிய பின் கொழும்பு நகரில் மாயமாய் மறைந்துவிடு கிறார்கள். பின் பாராளுமன்ற உறுப் பினரை சந்திக்கமுடியாது. அவரின் மெய்பாதுகாவலர்களும், தரகர்களும் தான் தரிசனம் தருகின்றார்கள் என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி வாசுகி தனதுரையில் எமது உரிமைகள் இங்கு ஒடுக்கப்படும் போது அதை தட்டிக்கேட்க முடியாத பய உணர்வு இங்கு வளர்க்கப்பட்டுள்ளது. இதனால் எமது குழந்தைகளும் பயந்து வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது இதை மாற்றவேண்டும் என்றார்.

தமிழர் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிர்வாக உறுப்பினர் சன் - தவராசா நன்றியுரையினை நிகழ்த்தினார்.

## விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நெறி

(எஸ்.எஸ். குமார்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாடு விளையாட்டுத் துறை அமைச்சு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 57விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு 1 மாத பயிற்சியை வழங்கிவருகின்றது இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பமான பயிற்சி 30ம் திகதிவரை வதிவிடத்துடன் கூடியதாக மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. வில்ளையாட்டு சட்ட திட்டம், நுட்பங்கள், ஒழுங்கமைப்பு, முகாமைத்துவம் ஆகிய வற்றில் இவ்விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

### பாராளுமன்றக்.......

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேவை ஏற்படும் கட்டத்தில் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நால்வர் கைது செய்யப்பட்டு விடுதலை !

(கொழும்பு)

காலிப்பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றினுள் வைத்து இரு மாணவர்களும் இரு மாணவிகளும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்துள்ளதாக காலி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசோகரத்தின வீர தெரிவித்தார்.

### மீட்டக்களப்பு ........

யத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களை கண்டித்து வடக்கு கிழக்கில் இடம்பெற்ற ஹர்த்தால் துக்கதினம் போன்ற நிகழ்வுகளின் பின்னர் பரவிய வதந்திகள் காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்லவில்லை.

இதுசம்பந்தமாக பெற்றோர்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்த போது மாணவர்களை பாடசாலைக் குள் அனுமதிக்காது திருப்பி அனுப்புவது குற்றம் எனத்தெரிவித் துள்ளனராம்

இதுசம்பந்தமாக கல்லூரி அதிபர் இம்மாணவர்களை திருப்பி அனுப்பாமல் பெற்றோர்களை அடுத்த நாள் அழைத்து வருமாறு கூறியிருக்கலாம். ஆனால் மாணவர்களை பாடசாலையை விட்டு வெளியேற்றியமையால் மாணவர்கள் உளரீதியாக பாதிப்புக்கு உள்ளாக நேரிடும் என பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

### 20 தமிழ்க்.....

கமலசபேசனிடம் கேட்டுள்ளார்

சுமார் இருபது தமிழ்க்கைதிகள் இவ்வாறு தடுப்புக் காவலில் உள்ளனர். வழக்குத் தவணைகளின் போது இராணுவத் தொடரணி வாகனங்களுடன் இவர்களை மட்டக்களப்பிற்குக் கொண்டு வருவது வழக்கம். இதன்போது கைதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். சிலவேளைகளில் கைதிகள் உரிய தினங்களில் அழைத்து வரப்படாமையினால் வழக்குகள் ஒத்திவைக்கப்படுகின்றன. அத்தோடு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்ளை உறவினர்கள் பார்வையிடுவதும் கடினமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறதென்றும் அலிஸாஹிர் மௌலானா எம்பி.சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.